நர நரவெனக் கடித்தது. மனைவியின் தலைமயிரைப் பற்றி இழுத்து முதுகில் பலமாகக் காலால் மிதிக்கும் அந்த முரட்டுத்தனம் அனைத்தும் வலிய வந்துவிட்டன. காமாக்ஷியிடம் கொஞ்சிப் பேசுவானே, இப்பொழுது அவள் அவனுடைய கண்களுக்கு ராக்ஷஸி தான்.

இவ்விதமாக மாறிப்போன அவனுடைய குணங்களையும் செய்கைகளையும் நினைத்து காமாக்ஷி மிகவும் துக்கித்தாள். குடிப்பழக்கம் தான் காரணம் என அவள் கண்டாள். ஒரு நாள் அவன் அந்தப்போதையில் மயங்காமலிருந்த சமயம் காமாக்ஷி கெஞ்சினாள். குடிப் பழக்கம் எவ்வளவு தீமைகளை விளைவித்திருக்கிறதென எடுத்துச் சொன்னாள். முதலில் கிருஷ்ணனுக்கு ஒருவாறு பட்டது. சத்தியம் செய்து கொடுத்தான்- இனி மேல் கள் குடிக்கிறதே இல்லையெனத் தீர்மானமாகச் சொன்னான்.

காமாக்ஷிக்கு அளவற்ற சந்தோஷம்தான். ஆனால் அன்று இரவே கிருஷ்ணன் தள்ளாடிக் கொண்டு வந்ததை அவள் பார்த்தாள். மலர்ந்த புஷ்பம் நெருப்பில் பட்டு, கருகிச் சுருங்கிவிடுவதுபோல் அவளுடைய உணர்ச்சி ஒடுங்கிவிட்டது.

கிருஷ்ணனுக்கு காமாக்ஷியை அடிப்பதும், தொந்தரவு செய்வதும் சர்வ சாதாரணமாகிவிட்டன. காமாக்ஷியின் உடம்பில் அடிபட்ட தழும்புகள் இன்னும் ஆறாதிருந்தன.

அன்று மத்தியானம் கிருஷ்ணன் படுத்திருந்தான். காமாக்ஷி அவனுடைய கால்களைப் பிடித்துக்கொண்டிருந்தாள். அடுப்பில் கொதித்துக்கொண்டிருந்த சோற்றுப் பானை 'மகிழ்ந்து' சாதம் கீழே வடிந்தது. காமாக்ஷி எழுந்து ஓடி அதை அகப்பையால் கிளறி ஆற்றினாள். போதையில் அரை மயக்கமாய் படுத்திருந்த கிருஷ்ணனுக்கு அது குற்றமாம். எழுந்து அவளுடைய தலைமயிரைப் பற்றி இழுத்து பலமாகத் தாக்கினான்.

காமாக்ஷி இதை சகிக்காமல் அவனுடைய குடிப் பழக்கத்தால் அவனுடைய குணம் கேடுற்றதையும், அதனால் தான் படும் அவஸ்தையையும் நினைத்து கண்ணீர் விட்டாள். அன்று முழுதும் அவள் ஆகாரம் தொடவில்லை. ராத்திரி வெகு நேரமாகியும் அவளுக்குத் தூக்கம் வரவில்லை.

இனியும் அவனுடனிருந்து வாழ அவளுக்குப் பிரியமில்லை. நரக வேதனைப்படுவதை அவள் பொறுக்க முடியவில்லை. சுகம் எதிர்பார்க்கும் அந்தப் புருஷனிடமிருந்து துக்கப்படுவதை நினைத்து மிகவும் கலங்கினாள். போதையில் அவன் உருண்டுவரும் அந்த பயங்கரக் காக்ஷியைக் காண அவளுடைய மனம் இடம் தரவில்லை.

பெற்றோருக்குக் கடிதம் எழுதி தன்னை உடனே வந்து கூட்டிப்போகும்படி செய்யலாமா என நினைத்தாள். அப்பொழுதுதான் தனக்கு சாந்தி உண்டு என அவளுக்குப்பட்டது. தான் துஷ்ட புருஷனிடமிருந்து விடுதலைபெற்று, நிம்மதியாயிருக்கலாம். ஆனால் தாயும் தந்தையுமில்லாத, இயற்கையில் நல்ல சுபாவமும் கூடிய, தன் புருஷனுக்கு, குடிப்பழக்கத்தால் கெட்டு, சுய புத்தி இழந்திருக்கும் சமயத்தில் தான் ஒருவள் தானே துணை. தானும் வீட்டுப் பிரிந்தால் அவனை வேறு யார் கவனிப்பார்கள்? வேண்டாம். என்ன கஷ்டம் வந்தாலும் அவனுடனிருந்து தான் பொறுமையாக அனுபவிக்கவேண்டும் எனச் சற்று நேரத்தில் பரிதாபப்பட்டாள். பெற்றோருக்கு எழுதும்படி எடுத்த கடிதத்தையும் பேனாவையும் திரும்பவும் மடக்கி வைத்து விட்டாள்.

பாயின்மேல் சாய்ந்து பெருமூச்சு விட்டாள். தன் நிர்க்கதியை நினைத்து அழுதாள். அவளுக்கு நினைவு இருந்தவரை எல்லா தெய்வங்களுக்கும், ஒன்று பாக்கியில்லாமல் வேண்டிக் கொண்டாள்.

என்ன இருந்தாலும் கிருஷ்ணன் குடித்துத் தெருக்களில், தெம்மாங்குப் பாட்டுப் பாடிக்கொண்டு, தள்ளாடிக்கொண்டு வருவதை அவள் மிகவும் வெறுத்தாள். அந்தச்சமயம் அவனிடம் அவள் படும் அவஸ்தையை நினைத்த போது மிகவும் பயமாயிருந்தது. எத்தனை அடிகள்! எத்தனை மிதிகள்! அவளுடைய உடம்பும் சதை, எலும்புகளால் ஆனது தானே. அவளுடைய பதிபக்தி உயர்ந்திருக்கலாம். அதனால் உடல் வேதனையை பொறுப்பது எப்படி? பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டும் என நாம் நினைக்கலாம்; சொல்லலாம். அப்பொழுதுதான் அவள் சரியான பதிவிரதை என விமர்சிக்கலாம், ஆனால் அடிபட்டு மிதிபட்டு நைந்து போயிருந்த காமாக்ஷியின் உடம்பு இன்னும் அவைகளைத் தாங்க சக்தியில்லை.

சுயபுத்தி இழந்து வரும் சமயம் தன் உயிருக்கே ஏதேனும் அபாயம் வரலாம் என நிமிஷத்திற்கு நிமிஷம் எதிர்பார்த்திருந்தாள், காமாக்ஷி இவைகளைப்பற்றி நினைக்கையில் கொஞ்ச நாள் விட்டுப் பிரிந்திருப்பதே சிலாக்கியம் எனத் தீர்மானித்தாள்.

படுக்கையை விட்டுஎழுந்தாள் விளக்கைத் தூண்டினாள். பேனாவையும், காயிதத்தையும் எடுத்தாள். மோட்டை அடுத்திருந்த அந்த சின்ன ஜன்னல் வழியாக வாடைக் காற்று வந்துகொண்டிருந்தது. அதனால் அவளுடைய உடம்பு நடுநடுங்கியது. சிறிது நேரம் என்ன எழுதுவது என சிந்தித்தாள். எழுத ஆரம்பித்தாள். ஒரு பக்கம் எழுதினாள். மறு பக்கம் எழுத ஆரம்பித்த போது தான் கிருஷ்ணன் வந்து விட்டான்!

விளக்கொளியைப் பற்றிக் கேட்டானல்லவா? காமாக்ஷிக்கு என்ன சொல்ல முடியும்? 'விளக்குக் கிடையாது' எனத் திடமாய்ச் சொல்லிவிடலாமா? எறிந்தது உண்மை. அவரே நேரில் பார்த்திருக்கிறார். இதை எப்படி மறைப்பது? அது கூடாது! விளக்கு எறிந்தது தான்: நான் எழுந்ததும் அணைந்து விட்டது, என மழுப்பிவிடலாமா? என நினைத்தாள். தான் இல்லாத சமயம் விளக்கை எறிய விடுவது. தான் வந்த பின் அணைத்து விடுவது. இது பொருத்தமா, எனக் கேட்டால் என்ன பதில் சொல்வது? அது சரியில்லை: வீணான சந்தேகத்திற்கு இடமாகலாம்.

'ஊருக்கு, அப்பாவுக்கு கடிதம் எழுதியதை மறைக்காமல் சொல்லி விடலாமா? அப்படியானால் அந்தக் கடிதத்தை அவரிடம் காட்ட வேண்டுமே. அதிலுள்ள விஷயத்தைப் பார்த்து ஆத்திரப்பட்டு அதனால் தொந்தரவு செய்ய மாட்டாரா? அப்போது அவன் வந்திருந்த நிலையில் காமாக்ஷிக்குத் தொந்தரவு இல்லாமலில்லை. பொய்யைச் சொல்லி வீணான சந்தேகத்தைக் கிளப்பிவிடுவதினும் உள்ளதைச் சொல்லி விடுவதே மேல் எனத் தீர்மானித்தாள்.

காமாக்ஷியினுடைய சிந்தனை மின்னல் வேகத்திலும் எத்தனையோ மடங்கு துரிதத்தில் சுழன்றது, கிருஷ்ணன் அதட்டினான். காமாக்ஷி உண்மையைக் கூறி கடிதத்தையும் எடுத்துக் கொடுத்து விட்டாள்.

துரதிருஷ்டவசமாக குடிப் பழக்கத்தால் தன் புருஷன் சுய உணர்விழந்து தவிப்பதை நினைந்து வருந்தியும் அதனால் அவர் தன்னைப் படுத்தும் இம்சையை சகிக்க சக்தி இல்லாதிருப்பதையும் குறிப்பிட்டிருந்தாள் அந்தக்கடிதத்தில்,

கிருஷ்ணனுக்கு கோபம் தாங்க முடியவில்லை. காகிதத்தை எத்தனையோ துண்டுகளாகக் கிழித்து எறிந்தான். தன் பலம் கொண்டமட்டிலும் காமாக்ஷியைத் தாக்கினான். "இப்பவே வெளியே போடி!" என அவளை வீட்டின் வாசல்படியில் தள்ளினான். பலவீனமான காமாக்ஷி படிகளில் உருண்டாள்.

அவளுடைய ஆவி பதறியது. உடல் பதை பதைத்தது, அவளால் தாங்க முடியவில்லை ஐயோ வென அவள் அலறினாள். அந்தக்கொடுமையிலிருந்து அவள் விடுபட உதவி வேண்டி அவளுடைய மனம் பதைத்தது. கிருஷ்ணன் குடிவெறியால் இன்னும் வீட்டுவாசலிலும் கீழே அவளைத்தள்ளித் தாக்கினான். பெரிய வீதி: அண்டை வீட்டுக்காரர்கள் கதவுகளை நன்றாகப் பூட்டி உள்ளே படுத்திருப்பதால் இந்த சம்பவமோ சத்தமோ அவர்களுக்கு எட்டவில்லை.

அந்தக் கொடுமைக்கானகாக்ஷியைக் காண சகிக்காதவன் போல் சந்திரன் கருமேகங்களினூடே புகுந்தான். நக்ஷத்திரங்கள் பிரகாசமின்றி லேசாக மினுக்கிக்கொண்டிருந்தன. வாடைக் காற்று மட்டும் ஓய்வில்லாமல் வீசிக்கொண்டிருந்தது. தென்னை மரங்கள் ஆடி அசைந்துகொண்டிருந்தன. ஆந்தையின் குரல் ஒரு பக்கம் ஒலித்தது.

அப்போதுதான் சுந்தரம், சினிமா இரண்டாவது ஆட்டம் பார்த்துவிட்டு அந்த வழி வந்துகொண்டிருந்தான். அவன் அந்தக் கோரக் காக்ஷியைக் கண்டான். காமாக்ஷியின் பரிதவிப்பைக் காண சகிக்கவில்லை.

ஓடோடி கிருஷ்ணனை விலக்கிவிட்டான் சுந்தரம். உதவி வந்துவிட்டதைப்பற்றி காமாக்ஷிக்குக் கொஞ்சம் தெளிவு.

கிருஷ்ணன் விலக மறுத்துவிட்டான். சுந்தரம் அவனுடைய கையைப் பிடித்து தடுத்த போதும் அவன் தன் காலால் காமாக்ஷியை ஓங்கி மிதித்தான். சுந்தரத்திற்குக் கோபம் வந்துவிட்டது. கிருஷ்ணனை ஓங்கித் தள்ளினான். கிருஷ்ணன் தள்ளாடி விழுந்தான், வாசல்படியில் அவனுடைய நெற்றி உரசினது. பலத்த காயம். ரத்தம் கொப்பளித்தது.

காமாக்ஷி அதைப் பார்த்து விட்டாள். தன்னுடைய குற்றுயிரான நிலையைக்கூட அவள் பொருட்படுத்தவில்லை: கிருஷ்ணனின் கொடூரத்தை அவள் நினைத்துப் பாராமல் எழுந்து கிருஷ்ணனைத் தாங்கினாள். ரத்தத்தைப் பார்த்து பயந்துவிட்டாள். உடல் வேதனையிலும் அப்பொழுது உள்ள வேதனை அதிகமானது.

“ஐயோ! சண்டாளப் பாவி, என் அத்தானைக் கொன்னுள்ளப்போட்டே!” என அலறி நிமிர்ந்து பார்த்தாள். சுந்தரம் மெதுவாக அந்த இடத்தைவிட்டு நகன்றுவிட்டான்.

தமிழ் நூல்கள்

லோகமான்ய திலகர்	0	8
இராஞ்சிதமாலா	0	8
ஜகஜ்ஜாலன்	1	10
குழந்தைக்கட்டி	1	4
உலகரகசியம்	1	0
அசலாம்பிகை	2	4
நவரத்னலாகெட்	0	12
கலா சேகரன்	1	
மறு கமலம்	0	12
ஜெய காந்தன்	0	8
தீனதயாளு	0	10
சகுனகதி சாஸ்திரம்	0	8

சுதேசமித்திரன் ஆபீஸ், சென்னை.

டோங்ரேயின்

பாலாமிருதம்

பிரசித்தி பெற்ற

குழந்தைகளின் டானிக்

சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 34 20-9-'42 Price 2 Annas

பழைய கறுப்பன்

ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன்

பிரிட்டிஷ் பிரதம மந்திரி இந்தியாவைப்பற்றிப் பேசப் போகிறார் என்று தெரிந்ததும், நாட்டிலே சற்றுப் பரபரப்பு கண்டது. பலருக்கு சந்தேகம்; சிலருக்கு சபலம்; எல்லோருக்கும் கேட்க ஆவல். ஏனெனில், சாதாரணமாக அவர் இந்தியாவைப்பற்றிப் பேச முன் வருவதில்லை. உத்தியோகம் ஏற்ற பிறகு இரண்டொரு முறை தான் பேசியிருக்கிறார். முதல் தடவை இந்தியாவுக்கும் அட்லாண்டிக் சாஸனத்திற்கும் சம்பந்தமில்லை யென்றார். இரண்டாவது முறை கிரிப்ஸ் தூதைப்பற்றிப் பிரகடனம் செய்தார்; அன்று வெகு உஷாராகப் பேசினார். பேச்சிலே அவருக்கு இயற்கையான பிரசங்க வன்மை காணவில்லை. சப்பென்று இருந்தது. உள்ளும் புறமும் ஒத்த உயிர்மொழிபோல் உறைக்கவில்லை. மறு முறை அவர் பேசுவார் என்றதும் அவரிடம் மாறுதலைப் பிரதீக்ஷித்தவர் கற்பனையில் ஆழ்ந்தனர். வீண் வேலை; சர்ச்சில் மாறவில்லை; பழைய கறுப்பன் தான்.

கெய்ரோவை விட்டுக் கிளம்புகிறார் சர்ச்சில்

பிரசங்கம் பிரமையூட்டும். அதிசயிக்கத்தக்க வழியில் அவர் சித்தாந்தம் செய்து கக்ஷிக்குப் பலங்கட்டினார். பொய் பேசுவது எளிது; மெய்போல் சித்தரித்துப் பேச அநுபவம் வேண்டும்; பொய்யை மெய்யென மாயாபந்தம் செய்ய அபார சக்தி வேண்டும். அந்த சக்தி தனக்குண்டென்பதை சர்ச்சில் நேற்று காட்டினார். கூடியவர் புத்தி பேதலித்துக் கரகோஷம் செய்ததே சான்று. பிரசங்க வன்மைக்கு முதற் பரிசு அவருக்கு உரித்தாகும். அவ்வளவுதானா அவர் பிரதீக்ஷிப்பது? கூடியிருந்தவர் வீடு திரும்பியதும் என்ன நினைப்பர்? பிரசங்கத்தைக் கேட்பவர் பார்லிமெண்டில் கூடியவர் மாத்திரம் அல்ல. நேர் முகமாக இந்நாட்டு மக்கள் சம்பந்தப்பட்டவர்; மறைமுகமாகப் பிறநாட்டு மக்களுக்கும் சம்பந்தமுண்டு. அவர்கள் எல்லோரும் என்ன நினைப்பர்? என்ன நினைத்தாலும் பரவாயில்லையா? அப்படி நினைத்து நிம்மதி காண இன்று உலக நிலைமை இடம் தரவில்லை.

சர்ச்சில் மீது தோஷம் கூறி லாபமில்லை. அவர் அறிந்த இந்தியா வேறு; இன்று துடிக்கும் இந்தியா வேறு. திரேதாயுகத்தில் இந்தியாவை ஒரு முறை அவர் எட்டிப் பார்த்தார். ஏகாதிபத்திய பித்தம் தலைக்கேறிய காலம். அன்றுகொண்ட அபிப்பிராயம் இன்றளவும் மாறவில்லை; மாற்றிக்கொள்ளவும் இஷ்டமில்லை. இருந்தால் கெயிரோ வரையில் வந்தவர் இந்தியாவுக்கு வரக் கூடாதா; அன்று இந்தியாவைக்கண்ட கண்ணில் பூ விழுந்து விட்டது. பார்வை மறைந்து விட்டது. துர்த்தசையில் பிரிட்டனுக்கு அவர் செய்த சேவை அளவிடற்பாலதன்று. சேவைக்கு ஒரு களங்கம் உண்டு. யுத்தத்தில் சுலபமாகவோ, சீக்கிரமாகவோ வெற்றி காண இந்திய உதவியைப் பூராவும் பயன் படுத்திக்கொள்ளாதது தான். பிரிட்டிஷாருக்குக் காலபலம் உண்டானால், இந்தியப் பிரச்னையைத் தீர்க்க அவரை எதிர் பார்ப்பது மாற வேண்டும்.

சர்ச்சிலின் பிரசங்கத்தை ஆராய்வது வினை கெட்ட வேலை. காங்கிரஸை அவர் பழித்தது பெரிதல்ல; அதன் பலத்தைக் கழித்ததும் பிரமாதமல்ல. காங்கிரஸ் கோரியது எவ்வளவு தூரம் மக்களுடைய ஆதரவைப் பெற்றதென்பது இங்குள்ளவர்களுக்குத் தெரியும். கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லை. காலம் அவரைக் கோமாளியாக்கியதை மாத்திரம் குறிப்பிடுவோம். நேற்று தான் காங்கிரஸ் தீண்டாத பெருமக்களைப்பற்றிப் பிரமாதமாகப் பேசினார். அவர்கள் இன்று அவரைப் பழித்துவிட்டனர். அவர் குறிப்பிட்ட கோஷ்டியைச் சேர்ந்தவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை இன்று வெளியாகியிருக்கிறது. காங்கிரஸுக்குச் சக்தியோ செல்வாக்கோ இல்லையென்றார் சர்ச்சில். சக்தியும் செல்வாக்கும் இருப்பதாக தாமே ஒப்புக்கொண்டவர் சொல்வதை அவர் கேட்பாரா? அந்தரங்க சுத்திக்கு அதுவே பதம்!

—இம்மாதம் 11-ந் தேதி எழுதப்பட்டது

டில்லியில் வருண ஜபம் நடத்த ஏற்பாடு செய்து வருகின்றனர். ஹிந்து மகாசபையினர் இதில் சிரத்தை காட்டிவருவது பொருத்தமே. நாட்டிலே சாவதானம் நிலைக்க வேண்டும்; சுபிக்ஷம் ஓங்க வேண்டும். சுவாதீனம் வளர வேண்டும். எல்லோரும் வேண்டுவது இவை தான். எல்லோருக்கும் தேடிக் கொடுக்கக் காங்கிரஸ் முற்பட்டது. காங்கிரஸ் கோரிய நன்மைகள் எல்லோருக்கும் எட்டுமா என்று சிலர் சந்தேகம் கொண்டனர்; ஹிந்துக்களுக்காகக் காங்கிரஸ் பரிந்து பேசும் என்று முஸ்லிம்கள் நினைத்தனர்.. முஸ்லிம்களுக்கு விட்டுக்கொடுத்து விடுமென்று ஹிந்துக்கள் அஞ்சினர். காங்கிரஸின் செல்வாக்கை அடக்க இரண்டு வகுப்புவாதக் கட்சிகள் குறுக்கிடவே, காங்கிரஸையே அடக்க அதிகாரிகள் தைரியம் கொண்டனர்.

நிர்ப்பந்த முறைகளில் இறங்க நேரிடுமென்று காங்கிரஸ் பயம் காட்டிற்று. இறங்கும் வரையில் காத்திருக்கவில்லை. இறங்காமலிருக்கப் பேச்சு நடத்தவில்லை: இறங்கு முன் காங்கிரஸின் 'கொட்டத்தை' அடக்கப் புறப்பட்டனர். எதிர்பாராத விதம் எங்கும் அமைதிக் குறைவு தென்பட்டது. சாயையும் சோடும் தான் கண்ணுக்குப் புலப்படுகின்றன. விசையும் வீச்சும்காணவில்லை. அடங்கி வருவதாக அதிகாரிகள் தைரியம் கூறுகின்றனர். தைரியம் கொள்ளவில்லை. வெளித்தோற்றம் மாறலாம்; விஷம் உடலை விட்டு விலகினாலொழிய நிம்மதி கொள்வதற்கில்லை. கவர்ன்மெண்டின் கவலை அந்த வழியில் இன்னும் திரும்பவில்லை. திருப்பத்தவிக்கின்றன பெரிய தலைகள்.

'கல்யாணமானால் பைத்தியம் தெளியும்; பைத்தியம் தெளிந்தால் கல்யாணமாகும்' என்று நாடோடியாகச் சொல்வதுண்டு. ஆகாத காரியத்திற்குத் தீராத காரணம் சொல்லும் முறை இது! கல்யாணம் நிச்சயமா? பைத்தியம் உண்மையா? கல்யாணத்தைத் தவிர்க்கப் பைத்தியக்காரப்பட்டமா? யார் பதில் சொல்ல முடியும்? உள்ள நிலைமையில் ஒன்று தான் உறுதி. நம்பிக்கை கொள்ள இடமில்லை; நம்பிக்கை இழக்கவும் மனமில்லை; அன்று விலகி நின்றவர் இன்று உறவாடக்கிளம்பியிருக்கின்றனர். நிலைமை எல்லோரையும் சிந்தனையில் ஆழ்த்தி வருகிறது. ஒருமுகமாகப் பேசி வந்தவர்களிடையே மாறுபட்ட அபிப்பிராயங்கள் தலை தூக்கி வருகின்றன. ஹிந்து மகாசபையில் மூலவருக்கும் உத்ஸவருக்கும் வேற்றுமை காண்கிறது. முஸ்லிம் லீகில் தலைவருக்கும் தொடருவோருக்கும் இடையே பின்ன அபிப்பிராயம் உருவாகிவருகிறது.

—(பின் பக்கம் பார்க்க)

சென்றவார நிகழ்ச்சிகள்

பிரதம மந்திரிக்கு விண்ணப்பம்

டில்லியில் கூடி நெருக்கடியைத் தீர்ப்பதற்கான யோசனை செய்து வரும் தலைவர்கள் இந்தியப் பிரச்னையைத் தீர்க்கப் பிரிட்டிஷ் பிரதம மந்திரி தக்க முயற்சி செய்ய வேண்டுமென ஒரு விண்ணப்பம் விடுத்திருக்கின்றனர். உடனே உண்மையான அதிகாரத்தை இந்தியர்கள் கைக்கு மாற்ற வேண்டும். அபிப்பிராய பேதத்துக்கு இடமான பிரச்னைகளைப் பின்னை தீர்த்துக்கொள்ளலாம் என அதில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த விண்ணப்ப நகல் வைஸராய்க்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. மிஸ்டர் சர்ச்சிலுக்கு இந்த விண்ணப்பம் தந்திமூலம் அனுப்பப்பட்டிருக்கிறது

* * * *

ஸ்ரீ ஆனேக்கு விக்ஞாபனம்

ஒற்றுமை காணவும் தேசிய சர்க்கார் ஏற்படவும், காங்கிரஸ் தலைவர்கள் விடுதலை பெறவும் உதவி புரியும்படிக் கேட்டுக் கொண்டு அமராவதி நகரப் பிரஜைகள் கமிட்டித் தலைவர்கள் எம். எஸ். ஆனேக்கு ஒரு தந்தி அனுப்பியிருக்கிறார்கள்.

மேற்படி வேண்டுகோளில் சுமார் 4000 பேர் கையொப்பமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

* * * *

ஐரோப்பியரின் ஆதரவு

கல்கத்தாவிலுள்ள ஐரோப்பியர் பலர் ஒரு கூட்டம் கூடி தற்கால நிலைமையைப்பற்றி விவாதித்தனர். அக் கூட்டத்தில் மிஸ்டர் ஆர்தர் மூர் தலைமை வகித்தார்.

இக் கூட்டத்தில் பின் வருமாறு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது:—

பிரிட்டிஷ் ஸர்க்கார் உடனே எல்லா அதிகாரங்களையும் இந்திய தேசிய ஸர்க்காரிடம் கொடுத்துவிட சித்தமாகவிருப்பதாக வெளியிட வேண்டும். அந்த தேசிய சர்க்கார் அமைவதற்கான வசதிகளை உடனே செய்ய வேண்டும் என இச்சங்கம் அபிப்பிராயப்படுகிறது.

ஐரோப்பிய வகுப்பினரின் பொது அபிப்பிராயத்தை அறிய பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தத் தக்க ஏற்பாடு செய்யவும் இக்கூட்டத்தில் ஒரு தனிக் கமிட்டி நியமிக்கப்பட்டது

இந்த சமயத்தில் ஒற்றுமை அத்யாவசியமாதலால் அந்தப் பொதுக் கூட்டத்தால் பயன் விளையும் எனத் தாம் நம்புவதாக மிஸ்டர் ஆர்தா மூர் கூறினார்.

* * * *

மிஸ்டர் சர்ச்சில் பிரசங்கம்

இம் மாதம் 10-ந் தேதி காமன்ஸ் சபையில் மிஸ்டர் சர்ச்சில் இந்தியா நிலைமை பற்றிப் பேசுகையில் பின் வருமாறு கூறினார்:—இந்திய நிகழ்ச்சிகளின் போக்கில் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. மொத்தத்தில் நிலைமை நம்பிக்கை யூட்டக் கூடியதாக இருக்கிறது.

பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் வெளியிட்ட அறிக்கையின் பரந்த கொள்கைகளே ஸர் கிரிப்ஸ் தூதுக்கு ஆதாரமாக இருந்தது. இந்த அறிக்கை பிரிட்டிஷ் அரசரும் பார்லிமெண்டும் இந்தியா சம்பந்தமாகக் கையாளும் முறையை திட்டமாக நிர்ணயித்து விட்டதாகக் கொள்ள வேண்டும். இந்தக் கொள்கைகள் பூரணமாக அப்படியே இருக்கின்றன. இவற்றில் எவரும் எதையும் சேர்க்க முடியாது. இவற்றிலிருந்து எதையும் எவரும் எடுக்கவும் முடியாது.

இந்தியக் காங்கிரஸ் கட்சி ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸின் உதவியை நிராகரித்து விட்டது. இத்துடன் இவ்விஷயம் முடிவடைந்துவிட வில்லை.

இந்திய காங்கிரஸ் கட்சி இந்தியாவின் பிரதிநிதி ஸ்தாபனமல்ல. அது இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான மக்களது பிரதிநிதியுமில்லை. அது ஹிந்துக்களது பிரதிநிதி ஸ்தாபனமுமல்ல.

மிஸ்டர் காந்தியும் மற்றுமுள்ள முக்கியமான தலைவர்களும் எவ்வளவு அதிக சௌகரியங்களுடன் பந்தோபஸ்தில் வைக்க முடியுமோ அவ்வளவு அதிக சௌகரியங்களுடன் பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருக்கின்றனர். தொல்லைகள் அடங்கும் வரை இவர்கள் தீங்கெதுவும் செய்ய இயலாதபடி பந்தோபஸ்தில் வைக்கப்பட்டிருப்பார்கள்.

மடகாஸ்கர் போர்

மிஸ்டர் சர்ச்சில் இம்மாதம் 11-ந் தேதி காமன்ஸ் சபையில் அறிவித்ததாவது:—

“மடகாஸகரில் நாம் துவக்கிய ராணுவ நடவடிக்கை முழுதும் வெற்றிகரமாக நடந்தேறியிருக்கிறது, உயிர்ச் சேதம் குறைவு.

மடகாஸ்கரில் மேற்குக் கரையிலுள்ள சில முக்கிய ஸ்தலங்களிலிருந்து கொண்டு எதிரி சப்மரீன்கள் மோஸாம்பிக் கால்வாயில் நமது கப்பல்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சல் விளைக்கக் கூடும். அந்த ஸ்தலங்களைக் கைப்பற்றுவதே நமது நோக்கம்.

501 ஸ்பெஷலைத்தவிர பிரசித்திவாய்ந்த 501 வாஷிங் ஸோப்புமுள்ளது. எல்லா வீட்டுக் காரியங்களுக்கும் தகுதியான ஸோப்பு. சதுரக்கட்டிகளாகவும், நீளக்கட்டிகளாகவும், வில்லைகளாகவும், சீவல்களாகவும் எல்லாப் பிரபலக் கடைகளிலும் கிடைக்கும். 501 ஸ்பெஷல் ஸோப்பு வில்லைக்கட்டிகள் மூன்றுவிதமாக பெட்டிகளில் பாக்கு செய்துவிற்கப் படுகிறது.

டாம்கோ விற்பனை இலாகா:
1, வாரன ரோட், பீமன்பேட்-மைலாப்பூர், மதராஸ்.
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமி.,
டாடாபுரம் & பம்பாய்,

F S. 1949.

பழைய கறுப்பன் (முன் பக்கத்தொடர்ச்சி)

விக்னங்களை லக்ஷியம் செய்யாது முனைந்திருக்கிறார். டாக்டர் முகர்ஜி. அவர் முயற்சி பாராட்டுதற்குரியது முயற்சி தான் அவர் கையில் அடங்கியது. முடிவல்ல. முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார் என்பது மூதுரை. புகழ்ச்சியுமடைவர் என்று எதிர்பார்ப்போம். அவர் வெளியிட்டுள்ள திட்டத்தில் புதிதொன்றுமில்லை. கவர்ன்மெண்டார் சுலபமாய் ஒப்புக்கொள்ளக்கூடியவை. ஒப்புக்கொண்டால் அடிப்படையான சந்தேகம் தீரும். அதிகாரத்தை மாற்றுவதில் ஆக்ஷேபனையில்லையென்பது தெளிவாகும். காங்கிரஸ் லக்ஷியத்தையே பிரதானமாகக் கருதிற்று: எவ்வித வரையறைகளையும் ஏற்க இஷ்டப்படவில்லை. இன்றைய நிலைமையில் அநுபவ சாத்தியமானதை அளந்து கட்டியிருக்கிறார் டாக்டர் முகர்ஜீ. ஜனுப் ஜின்னு ஆதரவு அளித்தால் திட்டம் ஈடேற இடமுண்டு. ஜின்னுவின் மனப்போக்கை யார் மதிப்பிடமுடியும்? ஒன்றை மாத்திரம் அவர் அறிந்து கொண்டால் சமரஸத்திற்கு இடமுண்டு. முஸ்லிம்கள் பூராவும் அவரைத் தொடர்ந்தாலும் சுயராஜ்யம் பெற அது போதாது. பிறருடைய ஒத்துழைப்பில்லாமல் முஸ்லிம்களுக்குத் தனித்துச் சுயராஜ்யம் வரப்போவதில்லை. விலகி நின்றால் வழி மறிக்கலாம்; உடன் சென்றால் முஸ்லிம்களுள்ளிட்ட ஏனைய மக்களுக்கும் சுவாதீனம் பெற வழியுண்டு. அதைத்தான் அவர் அறிய வேண்டும்.

— இம்மாதம் 9-ந் தேதி எழுதப்பட்டது.

சீவக சிந்தாமணி-13.

சீவகன் யாத்திரை

★

வ. வேணுகோபாலன் எழுதியது

சீவகனை எடுத்துச் சென்ற சுதஞ்சணன் சங்க வெண் மலையிலுள்ள சந்திரோதய நகரத்தை அடைந்தான். புதியதொரு மண்டபம் அமைத்து அதில் சீவகனை இருக்கச் செய்தான். சீவகனுக்கு நேர்ந்த சிறைப்பாவம் நீங்கும்படி புண்ணிய தீர்த்தத்தால் நீராட்டுவித்தான். தன் மனைவியர்களுடனும், பரிவாரங்களுடனும் சேர்ந்து சீவகனுக்கு விருந்து செய்வித்து மகிழ்ந்திருந்தான். கட்டியங்காரனால் சிறைப்பட்ட போதும், சுதஞ்சணனால் விடுதலையடைந்தபோதும் வருத்தமும் மகிழ்ச்சியும் சிறிதும் இல்லாமல் விதியின் செயல் என்று எண்ணியிருந்தான் சீவகன். சீவகனுக்கு மகிழ்ச்சி யுண்டாக்கும் பொருட்டு நாட்டிய மங்கையர் பலரை அவன் முன்பு நடிக்கச்செய்தான் சுதஞ்சணன். அதனால் சீவகன் ஒருவாறு கவலையற்று மகிழ்ச்சியோடிருந்தான்.

“ஐய! எம் கண்கள் இவ்வீரனுடைய அழகைக் கண்டு இமையாதிருந்த பயனைப் பெற்றன. உமக்கு எவ்வாறு இவ்வீரனுடன் நட்பு உண்டாயிற்று?” என்று சுதஞ்சணனை அவன் மனைவியர் கேட்டனர்.

“இந்த வீரன், எனது தாய்ப் பிறப்பை நீக்கி இவ்வுடம்பைப் பெறும்படிச் செய்தான்” என்று கூறிச் சீவகன் வரலாற்றையும் தன் மனைவியரிடம் சொன்னான்.

“அவ்விதமானால், இவ்வீரனுடைய பகையை நாம் அழித்துப் பூமியை இவனுக்கு உரிமையாக்குவோம்” என்று அத்தேவ மகளிர் கூறினர்.

“நங்கையரே! நீங்கள் போக பூமியையும் தேவருலகத்தையும் நிலவுகத்திலே தாருமென்றாலும் தர வல்லமையுடையீர்; ஆனால் யான் பூமியைப் பெறும் காரியத்தில் நீங்கள் ஒன்றும் எண்ண வேண்டாம். போர்க்களத்தில் பகைவனைக்கொன்று யானே என் பூமியைப் பெறுவேன்” என்றான் சீவகன்.

சீவகனுடைய மொழியையும் வீரத்தையும் பார்த்த யாவரும் வியப்பும் மகிழ்ச்சியும் கொண்டு பேசாதிருந்தனர். சீவகனுடைய புகழை எடுத்துக் கூறி, சுதஞ்சணன் மகிழ்ச்சியுடனிருந்தான். அப்போது சீவகன் கருத்தில் ஓர் எண்ணம் உதித்தது. சுதஞ்சணனிடம் தன் எண்ணத்தைச் சொல்ல விரும்பினான்.

“நண்ப! பூமியிலுள்ள காடுகளும், மலைகளும், நாடுகளும், பொய்கைகளும், ஆறுகளும் என் கண்களைக் குளிரச்செய்வன. அந்தக் காட்சிகளைப் பார்க்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு மிகுதியாக உள்ளது. கிணற்றில் தங்கியுள்ள மீன்களைப்போலத் தாம் பிறந்த ஊரிலேயே இருந்துவிடுகின்றவர்கள், அயல் நாட்டின் இன்பத்தைப் பெற முடியாது. ஆதலால் யான் பூமியின் வளப்பத்தைக் காணச் செல்கிறேன்; நீ இவ்விடத்திலே இரு” என்று சீவகன் மொழிந்தான்.

சீவகன் எண்ணத்தை அறிந்த சுதஞ்சணன் மனமகிழ்ந்தான். சீவகனுடையநன்மையைக் கருதி அவனுக்குப் போகும் வழிகளின் இயல்புகளைச் சொல்ல எண்ணினான் தன் அருகே சீவகனை இருக்கச் செய்தான். மலையிலிருந்து செல்லும் வழிகளையும் காட்டின் வழிகளையும், அவ்விடங்களின் இயல்புகளையும், வழியில் நிகழும் இன்பதுன்பங்களையும் விளங்கச் சொன்னான். சீவகன் வழியின் தன்மைகளை அறிந்து உவகை கொண்டான், சீவகனுக்கு மேல் நடக்கும் காரியங்களை ஞானத்தால் அறிந்திருந்த சுதஞ்சணன், சில மந்திரங்களை கூற நினைத்தான். சீவகனைத் தனியே அழைத்துச் சென்று, அழகுமிக்க உடம்பைத் தரும் மந்திரத்தையும், பாம்பு முதலியவற்றின் விஷத்தையும் நோயையும் தீக்குதற்குரிய மந்திரத்தையும் வேண்டிய உடம்புகளைத் தரும் மந்திரத்தையும் அவனுக்கு மொழிந்தான். மந்திரங்களை உபயோகிக்கும் தந்திரங்களையும், சீவகன் அறியும்படிக் கூறினான்.

சீவகன் மூன்று மந்திரங்களையும் தன் மனத்தே நன்றாக இருத்திக் கொண்டான். பின்னர் சுதஞ்சணனிடமும், அவன் மனைவியரிடமும் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான், அப்போது சீவகன் மனத்தில் காந்தருவதத்தையைப் பற்றியும், குணமாலையைப் பற்றியும் எண்ணம் உண்டாயிற்று. ‘காந்தருவதத்தையையும் குணமாலையையும் இன்னும் ஒருமாதத்தில் சென்று காண்பேனோ?’ என்று சீவகன் எண்ணலுற்றான், சுதஞ்சணன் அவனுடைய மனக்கருத்தை உணர்ந்தான். சிறிது புன்முறுவலுடன் சீவகனைப் பார்த்து “அன்ப! நீ அவர்களைச் சேர்ந்து நிலையாக இன்புறுவது பன்னிரண்டாம் மாதத்தில் தான். அதற்குள்ளாக நிலையான இன்பத்தைப் பெறமுடியாது. பன்னிரண்டாம் மாதத்தில் உன் பகைவனை கட்டியங்காரனை வென்று முடிசூடிப் பின்னர் முத்தியும் பெறுவாய்” என்று மொழிந்தான். தன் எண்ணத்தை அறிந்து மறுமொழி கூறிய சுதஞ்சணனைச் சீவகன் தழுவிக் கொண்டான். அரசிளங்குமரனாகிய சீவகன், மலையிலிருந்து நடந்து இறங்கிச் செல்வதற்கு மனம் பொருத சுதஞ்சணன், தானே எடுத்துச் சென்று கீழே கொண்டுவிட எண்ணினான். சீவகனைத் தன் இரண்டு கைகளாலும் அள்ளி எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு புறப்பட்டான். தன் விஞ்சையால் ஒரு கணத்தில் மலையிலிருந்து கீழே உள்ள ஒரு சோலையில் வந்து நின்றான். சீவகனை அவ்விடத்தே நிறுத்தி “அன்ப! உன்னைப் பின்பு பார்ப்பேன்” என்று கூறி மறைந்தான்.

சுதஞ்சணனுடைய உதவியை நினைந்து அவன் அன்புக்கு மன மகிழ்ந்தான் சீவகன். உடனே தனியாக அந்த சோலைவழியே நடந்தான். இதற்கு முன்னம் தனியே சென்று அறியாத சீவகன் சோலையிடத்தே தனியே நடந்து சென்றான். அரசிளங்குமரன் காலால் நடந்து காட்டில் செல்வதைக்கண்டு வருந்தி அழுவனதைப் போல் மலைகளிலிருந்து அருவிகள் ஒழுகிக் கொண்டிருந்தன. அறிவில்லாத மூடர்கள், பேரியோர்களுடைய துன்பத்தைக் கண்டு பரிகசிப்பதுபோல், முல்லையரும்புகள் நிறைந்த கொடிகள் சீவகனுக்கு முன் ஆடிக்கொண்டிருந்தன. சீவகனைக் கண்டு முல்லை யரும்புகள் சிரிப்பதை வண்டுகள் பார்த்து, ‘முல்லைகாள்! தனியாகப் போகின்றவனைக் கண்டு சிரிக்கின்றீர்; உம்முடைய பற்களை உகுத்திடுவோம், தெரியுமா?’ என்று கூறுவனபோல் ஒலித்து, முல்லையரும்புகளைக் குடைந்து தேனைக் குடித்துப் போயின!

பூக்கள் நிறைந்த செடிகளையும், கொடிகளையும், மரங்களையும், விலங்குகளையும், நீர் நிலைகளையும், மலைக்காட்சிகளையும் பார்த்துக்கொண்டே சீவகன் நடந்து சென்றான். இவ்வாறு சீவகன் செல்கையில் அவனுக்கு எதிரில் ஓர் வேட்டுவன் வந்து கொண்டிருந்தான்.

இருட்டின் ஒரு பகுதிக்கு கருமை பூசினாற்போன்ற மேனியை உடையவன். ஆழமான வங்குதளிலுள்ள உடும்புகளைப் பிடித்து இழுத்தலால் அவன் மார்பு உள்ளே ஒடுங்கியிருந்தது. அவன் அங்கங்கள் உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தன. பார்ப்பவருக்கு, நீண்ட மயிரையுடைய கரடியைப் போன்று தோற்றமளித்தான், வாய்க்கு வெற்றிலையே கண்டறியாதவன். அவன் பேச்சு ஆட்டின் குரல்போன்றிருந்தது. உடலில் பெரிய மரவுரி. காலில் செருப்பு. கையில் பெரிய வில். தோளில் அம்புறாத் தூணி தொங்கியது. அவனுடன் வந்துகொண்டிருந்த ஓர் இளமங்கை தழைகளையே ஆடையாக உடுத்துக்கொண்டிருந்தாள். அவர்கள் கைகளில் மாமிசமும், கிழங்குகளும், தேனும் இருந்தன. அவர்களுடைய விசித்திரமான தோற்றத்தைக் கண்டு சீவகன் வியப்புற்றான்.

“ஐயா! நீங்கள் இருப்பது எவ்விடம்?” என்றான் சீவகன்.

“இதா பார்! அருவியோடு தெரியும் மலையுச்சியிலுள்ள தினைப்புனத்தில்தான். அதற்குத் தென்மேலை மூலையில் யான் குறவர்களுக்குத் தலைவன்” என்றான் அவ்வேட்டுவன்.

“நல்லது: நீங்கள் உண்ணும் உணவு எவை?”

சீவகன் மொழியைக்கேட்ட வேட்டுவன் சிரித்துக் கொண்டான்.

(11-ம் பக்கம் பார்க்க)



வேவும் பிரசாரமும்

★

உளவாளிக் கதை

★

"நியாயவாதி" எழுதியது

★

1

நான்கு வருஷங்களுக்கு முன்—அதாவது ஸுடெடன் பிரச்னே ஐரோப்பிய சமுதாயத்தின் அமைதியைக் குலைத்துக்கொண்டிருந்த பொழுது—ஒரு ஆங்கில வேவுகாரன் செகோஸ்லோகியாவில் சஞ்சாரம் செய்யும்படி நேர்ந்தது. ஜெர்மனியர்கள் அதிகமாயுள்ள எல்லைப் பிரதேசத்தில் ஒரு ஊரில் அவன் ஒரு சமயம் தங்கினுன். ஒரு ஜெர்மன் தம்பதிகளின் விருந்தினனுக அவன் இருந்தான்.

அவனுக்கு உபசரணை செய்த ஜெர்மானியன் நாஸிக் கக்ஷியைச் சேர்ந்தவனல்ல. ஹிட்லரது யுத்த வெறி மனேபாவத்தை வெறுப்பவன். இது ஆங்கில வேவுகாரனுக்கு அவனது பேச்சிலிருந்தும் பழக்கத்திலிருந்தும் நன்கு புலனுயிற்று.

ஒரு நாள் அந்த ஆங்கில அதிதி தனது நண்பர்களுடன் சிற்றுண்டி அருந்திக் கொண்டிருந்தபொழுது, தனக்குக் கொடுக்கப்பட்ட ஒரு சாக்கலேட்டின் மீதுள்ள காகிதத்தை எடுத்தான். அத் தின்பண்டத்தை உண்ட பின்னும் அவன் காகிதத்தைக் கீழே எறியாமல் தன் கையில் வைத்துக் கொண்டிருந்தான். அற்ப சாமான்களில் கூட ஏதேனும் அதிசயமான விஷயங்கள் மறைந்திருக்க கூடும் என்ற மனேபாவத்தைக் கொண்ட அவன் அக் காகிதத்தை தன் பைக்குள் போட்டு ஒளித்துக் கொண்டான்.

தனிமையாய் அக்காகிதத்தை அவன் பின் பூதக் கண்ணுடியின் உதவியால் நோக்கின பொழுது அவனுக்கு ரகசியம் வெளியாயிற்று. ஆம்! அதில் சந்தேகமில்லை. செக்மாகினே அரணைச் சேர்ந்த கோட்டைகளின் ஒன்றின் படம் அதில் குறிப்பிடப் பட்டிருந்தது.

ஆங்கில வேவுகாரனுக்கு அது வியப்பை யளித்தது இயல்பே, ஏனெனில் அந்த ஜெர்மானியன் செக் சர்க்காரை புகழ்ந்தும் ஜெர்மன் துரைத்தனத்தாரின் முறைகளை கண்டித்தும் பேசியுள்ளான். அப்படிப் பேசியதெல்லால் வெறும் புரட்டுதானு? உண்மையில் அந்த ஜெர்மானிய தம்பதிகள் நாஸி அதிகாரிகளின் உளவாளிகளாய் இருக்கலாமோ?

ஆங்கில வேவுகாரனுல் அதை நம்ப முடியவில்லை. நாஸித் தத்துவத்தை வெறுத்துப் பேசிய அந்த ஜெர்மானியன் உண்மையில் ஒரு நாஸி வேவுகாரன் என்று முடிவு செய்வது நியாயமாகுமா? ஒரு சிறு காகிதத்தின் ஆதாரத்தைக் கொண்டு அவனை சந்தேகிப்பது பிழையன்றே?

தனக்குப் புலப்பட்ட ரகசியத்தை வெளியிட்டு தனது சந்தேகத்தை நேரில் அந்த ஜெர்மானியனை கேட்டு தீர்த்துக் கொண்டிருக்கலாம் அவ்வாங்கில உளவாளி. ஆனால் அப்படிச் செய்ய அவன் மனம் கூசியது. ஏனெனில் உண்மையில் ஜெர்மானியன் வேவுகாரனுயில்லாமல் நிரபராதியாயிருப்பின் அவனைச் சந்தேகித்ததற்காக அவன் வருத்தமும் கோபமும் அடைவான். "உம்மை அதிதியாய் ஏற்றதற்கு இதுதானே நீர் காட்டும் நன்றி?" என்று அவன் ஏசுவான். அப்படி பிழை செய்ய ஆங்கிலேயனது மனம் கூசியது.

ஆனால் உண்மையில் அந்த ஜெர்மானியன் ஒரு நாஸி உளவாளியாய் இருப்பின்! அப்படியிருப்பின் அவனிடம் உண்மையைத் தெரிவித்து அவனை விசாரிப்பது அசம்பாவிதமும் மதியீனமும் ஆகும் என்று எண்ணினுன் ஆங்கில உளவுகாரன். ஏனெனில் அப்படிச் செய்வது அந்த ஜெர்மானிய உளவாளியையும் அவனது சகாக்களையும் உஷார்படுத்தியதுபோல் ஆகும். அதனுல் அனுகூலம் பெறுபவர்கள் நாஸிகளேயன்றி செக் ஸர்க்கார் அல்ல. மேலும் அதனுல் அவ்வாங்கிலேயனுக்கு அபாயம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஏனெனில் தங்களது வியவகாரங்களிலும் இரகசியங்களிலும் தலையிடும் அன்னியர்களை நாஜிக்கள் உயிருடன் விடமாட்டார்கள்.

அந்த காகித உறையை ஆங்கில உளவுகாரன் செக் ஸர்க்காரிடம்கொடுத்திருக்கலாம். ஆனால் அப்படிச் செய்வது முறையல்லவென்று அவனுக்குத் தோன்றியது. ஏனெனில் அது அதிதி தர்மத்துக்கு விரோதமானது. மேலும் தன்னை உபசரித்த ஜெர்மானியன்நிரபராதியாயிருப்பின் அவனை வீணில் உபத்திரவத்துக்கும் கொடுமைக்கும் உள்ளாக்கிய பாவம் அவனைச்சேரும். ஆதலால் அப்படிச் செய்வது சரியல்ல என்று ஆங்கிலேயனுக்குத் தோன்றியது.

ஆனால் சும்மாவிருப்பதும் ஒழுங்காகாது. ஏனெனில் விஷயம் லேசானதன்று. ஐரோப்பா கண்டத்தையே யுத்த அபாயத்தில் ஆழ்த்தி விடும் பயங்கர ரகசியம் அச்சிறு காகிதத்தில் அடங்கியிருந்தது. ஆதலால் அது விஷயமாய் என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதைப் பற்றி ஆங்கில உளவாளி நீண்ட நேரம் சிந்தனை செய்தான்.

முடிவில் அவனுக்கு ஒரு சிறந்த யோசனை புலப்பட்டது. செகோஸ்லவேகியாவிலுள்ள ஆங்கில ஸ்தானீகரது காரியாலயத்தில் உத்தியோகம் வகித்த, தனது நண்பனிடம் சென்று அவன் அக்காகிதத்தை கொடுத்து தான் கண்டு பிடித்த விஷயத்தையும் கூறினுன். அது ஸம்பந்தமான உண்மை விவரங்களை ஆராயும்படி அவனை கேட்டுக் கொண்டான்.

2

சில தினங்களுக்குப்பின் அவ்வாங்கில உளவாளி மீண்டும் தன்னை உபசரித்த ஜெர்மானியனது வீட்டுக்குச் செல்லும்படி நேரிட்டது. மீண்டும் அவனது விருந்தினனுய் போஜனம் அருந்திய அவன் மறுபடியும் மற்றொரு சாகலேட் உறை காகிதததை கவனிக்கும் சந்தர்ப்பத்தைப் பெற்ருன். அக்காகிதத்தின் மீது ஏதோ ஒரு கொத்தளத்தின் படம் மிகச் சிறிய அளவில் காணப்பட்டது. அவன் எதிர்பார்த்தது வீண் போகவில்லை.

இந்தத் தடவை ஜெர்மானியன் தனது அதிதியின் கவனம் எதில் மீது சென்றுகொண்டது என்பதை கண்டுகொண்டான். அவன் முகத்தில் புன்னகை தோன்றியது. "என்ன! அக்காகிதத்தில் என்ன பார்க்கிறீர்" என்று வினவினுன்.

"ஏதோ ஒரு கோட்டையின் படம் இதன் மேல் அச்சடிக்கப் பட்டிருக்கிறது" என்ருன் ஆங்கிலேயன். அப்படிக் கூறிய பொழுது அவன் ஜெர்மானியனைக் கூர்ந்து நோக்கினுன்.

ஆனால் ஜெர்மானியனது முகத்தில் எவ்விதமான களங்கமோ மாறுபாடோ தோன்றவில்லை. அவனது நகைப்பும் நீங்கவில்லை.

"எந்தக் கோட்டையின் படம் அது?" என்று கேட்டுக்கொண்டே சிரித்தான் அவன்.

"எனக்கு என்ன தெரியும்! செக்மாகினே அரணைச் சேர்ந்த கோட்டைகளில் ஒன்று அது!" என்ருன் ஆங்கிலேயன்"

"இதைப்பற்றி உமது அபிப்பிராயம் என்ன?" என்று வினவினுன் ஜெர்மானியன்.

"செக் ஸர்க்காருக்கு விரோதமாய் ஏதோ சூழ்ச்சி நடைபெறுகிறது" என்று விடை கூறினுன் அவனது அதிதி.

ஜெர்மானியன் கடகடவென்று நகைத்தான். "உண்மை என்னவென்பது உமக்குப் புலப்படவில்லை. அதனுல் தான் நீர் என்னை ஒரு சதிகாரன் என்றும் நாஸிகளது ஒற்றன் என்றும் நினைக்கிறீர் போலும். ஆனால் விஷயம் என்ன என்பதை விளக்கிக் கூறுகிறேன்" என்று மேலும் பின்வருமாறு கூறினுன்:—

"இந்த ஸுடெடன்பிரதேசத்தில் 20 லக்ஷம் ஜெர்மானியர்கள் இருக்கிருர்கள். அவர்கள் எல்லாரையும் மீண்டும் ஜெர்மன் பிரஜைகளாக மாற்றி அவர்கள் வசிக்கும் பிரதேசத்தையும் ஜெர்மனியுடன் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே நாஸிகளின் லக்ஷியம். இதற்காக அவர்கள் பலமான பிரசாரங்கள் செய்கிருர்கள். அவர்களது பிரசார முறைகள் பல வகைப்பட்டவை. அவற்றை ஆராய்ச்சி செய்பவர்களுக்கு பல அதிசய விவரங்கள் புலப்படலாகும். "ஜெர்மன் வேவு இலாகா மக்களது மனேபாவத்தின் மீது கவனம் செலுத்துகின்றனர். இங்கே வசிக்கும் 20 லக்ஷம் ஜெர்மானியர்களும் நாஸி ஸர்க்கார் சர்வசக்தியுடன் கூடிய ஸ்தாபனம் என்று நம்பிக்கை கொள்ளுவதற்கு சாதகமான எல்லாவித பிரசாரங்களையும் செய்கின்றனர், செகோஸ்லவோகியாவை எந்த நிமிஷத்திலும் கைப்பற்றக்கூடிய வல்லமை தங்களிடம இருக்கிறது என்பதை ஸுடெடன் ஜெர்மானிருக்கு அவர்கள் பல விதங்களில் அறிவுறுத்துகின்றனர். செகோஸ்லவோகியாவின் ராணுவ பலம், அதன் கோட்டைகள், கொத்தங்கள், அரண்கள், முதலியவற்றைப்பற்றிய உண்மை விவரங்கள் எல்லாவற்றையும் ஜெர்மன் அரசாங்கத்தார் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிவதாகப் பெருமை கூறிக்கொள்ளுகின்றனர், ஜெர்மனியிலிருந்து இங்கே வரும் சாமான்களில் இந்த விஷயம் பிரகடனம் செய்யப்படுகிறது. சுருட்டுகளின் மேல் காகிதங்களில் செக் அரண்களின் படங்கள் காணப்படுகின்றன. பிஸ்கோத்து பாக்கட் உறைகளிலும் அனேக கோட்டைகளின் படங்கள் அச்சடிக்கப்படுகின்றன. மற்றும் பல சர்மான்களிலும் இதேவிதமான பிரசாரம் செய்யப்படுகிறது.

"உண்மையில் இந்த காகிதத்தில் காணப்படும் கோட்டை ஒரு நிஜகோட்டையன்று என்றே கூறுவேன். ஆனால் அதைப்பற்றி நாஜிக்களுக்கு லக்ஷியமில்லை. அவர்களது நோக்கம் இங்கேயுள்ள ஸுடெடன் ஜெர்மனியர்கள் அனைவரது மனேபாவத்தை தங்களது நாடு கவரும் லக்ஷ்யத்துக்கு சாதகம் அளிக்கும்படி பக்குவப்படுத்துவதேயாகும்.

"இப் பிரசாரம் வெகு நாட்களாக நடந்துகொண்டு வருகிறது. அதைத் தடுத்து எதிர் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுவது சாத்தியமல்ல. அப்படிச் செய்வது சங்கடத்தில் முடியுமேயன்றி வேறல்ல."

"இன்று இப் பிரதேசத்திலுள்ள ஜெர்மானியரது உள்ளங்களில் ஆழமாய் பதிந்துள்ளது இதுதான். அது என்னவெனில், 'ஹிட்லர் ஒரு அவதார புருஷர்; அவரது வசத்தில் செக் தேசம் பூராவும் எளிதில் வீழ்ந்துவிடும்' என்ற நம்பிக்கையே. இந்த நம்பிக்கையை வளர்த்து விருத்தி செய்ய நாஸி வேவு ஸ்தாபனம் இரவுப் பகலும் உழைக்கிறது. நியாயத்தையும் சமாதானத்தையும் விரும்பும் என் போன்றவர்கள் இவ்வுழைப்பு வீண்போகாது என்று அஞ்சவேண்டியதாயிருக்கிறது"

ஒன்றரை ஏக்கர் நிலம்

சிறு கதை

★

ரா. வெங்கடாசலம் எழுதியது

"அதில் உனக்கு என்ன வரும்படி வருகிறது? போயும் போயும் ஒரு வருஷத்திலே இருபது ரூபாய் காசாவது மிஞ்சுகிறதா? உரத்துக்குக் கொடுக்கவும், உழவுக்குக் கொடுக்கவும், கடைசியாய் சர்க்காருக்கு தீர்வையைக் கொடுக்கவும் சரியாய்ப்போய்விடுகிறது. என் மாரி? நான் சொல்வதைக் கேள். அந்த நிலத்துக்கு இப்ப நல்ல விலை. வித்துப்புட்டு இங்கே டவுனிலே நல்ல வீடாய் வாங்கிப் போட்டு விட்டால் மாதாமாதம் வாடகையை வாங்கி வரலாம்."

"உம் நிலத்தை விற்கிற பேச்சை இன்னெரு தடவை மட்டும் பேசவேண்டாம். அதிலே ஒன்னுமே வராட்டினுக்கூட பரவாயில்லை." அப்பா வாங்கிக் கொடுத்தது. இத்தனை காலமாய் ஏதோ கஞ்சி வாத்துட்டு வீருகிறதே, எனக்குக்கூட விசுவாசம் வேண்டாமா?

கோபால்சாமி செட்டியாருக்கு ஆத்திரம் மீறுகிறது. தான் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கொஞ்சமும் மதியாமல் இப்படி உதாசீனம் செய்து ஒரே பிடிவாதமாயிருப்பதில் மிகவும் கோபம்.

மாரியாயிக்கு அவளுடைய தகப்பனுர் அவள் பெயருக்கே ஸ்ரீதனமாக ஒன்றறை ஏக்கர் நஞ்சை நிலம் வாங்கி விட்டது. 15 வருஷமாக அதை அவர்கள் அனுபவித்து வந்தனர். ஆனால் அந்த நிலக்கிரயத்தின் மதிப்புக்கு வட்டி போட்டுப் பார்த்ததில் மிகவும் ஈனமாக இருந்தபடியால் கோபாலசாமி செட்டியாருக்கு அதை விற்று விட்டு வட்டி கட்டக் கூடியதாக பார்த்து ஒரு சொத்து வாங்கி விட வேண்டுமென ஆசை. அந்த ஆசை இப்போதுதான் அவருக்கு கைகூடும் சமயம் வந்தது என எண்ணினுர். 1000 ரூபாய் ஆனாலும் கொடுத்து விடலாமென நினைத்தார். திடீரென இருவர் போட்டியில் 1500-வரை உயர்ந்து விட்டது.

கோபால்சாமி செட்டியார் விலை திகைத்துவிட்டு மனைவியை சம்மதிககச் செய்ய வந்துகொண்டிருந்தார். ஒற்றையடிப் பாதை. செட்டியார்தான் வருகிற பாதை இதுவெனக் கூட சரியாகக் கவனிக்காமல் தன் சிந்தனையை நிலக்கிரய விஷயத்திலேயே செலுத்திக்கொண்டிருந்தார். "நாளை கிரயம் முடிந்துவிடும். 1500 ரூபாய்க்கும் பெரிய வீடாய் வாங்கி, வாடகைக்கு விட்டால், உம், 20 ரூபாய் மாதா மாதம் கறந்து விடலாம். இதை விட்டுவிட்டு அந்து, காஞ்சு, கறைஞ்சி போன நிலத்தைக் கட்டி அழுது கொண்டு,... நமக்கு இது நல்ல காலம்தான், ஆமாம், உடனே விற்றுவிட வேண்டும். தாமதம் செய்தால் விலை கேட்டவன் ஏதாவது ஒரு சாக்கில் பின்னரித்து விட்டால் என்ன செய்வது?"

செட்டியார் இவ்விதம் பலவாருக நினைத்துக் கொண்டு துரிதமாய் வந்தார். பூரிப்புடனும், உற்சாகத்துடனும் தான் அவர் வீட்டினுள் நுழைந்தார். அங்க வஸ்திரத்தை இரண்டு பக்கமும் சரியாகத் தொங்க விட்டுக் கொண்டு ஒரு கனைப்பு கனைத்தார். "அடி மாரி!" வெங்கலமணி ஓசைபோல் அழைத்தார்.

அச்சமயம், உள்ளே சமையல் அறையில் 'டப்' எனும் சப்தம் கேட்டது, மாரி பதார்த்தம் சமைக்க வேண்டி தேங்காயை உடைத்தாள். உடைந்த சப்தம் அது. "உம், என்னுங்க!" மாரி உட்கார்ந்தபடியே திரும்பி எட்டிப் பார்த்தாள்,

செட்டியார் உற்சாகமாக வந்து விஷயத்தைச் சொன்னுர். மாரி தேங்காய்ப்பூ திறுகியதையும்அப்படியே போட்டு விட்டு எழுந்தாள்.

"அந்தப்பேச்சை எடாதிங்க-" என ஆரம்பித்தாள். செட்டியாருக்கு தூக்கி வாரிப் போட்டு விட்டது. அவருடைய கனவு, கற்பனையை அவள் தேங்காயை உடைத்தது போல உடைத்து விட்டாள். எவ்வளவோ சொல்லிப் பார்த்தார். மாரி ஒரே பிடிவாதமாக நிலத்தை விற்கக்கூடாதெனச் சொன்னுள்.

இதனுல் மாரிக்கு இரண்டு உதை. செட்டியார், கொடியில் கிடந்த துண்டை உதறி மேலே போட்டுக் கொண்டு வெளியேறி விட்டார்.

"ஒரு பெண்ணுக்கு, அவ்வளவு தெம்பா?"

அடுப்பில் இரும்புச் சட்டியில் எண்ணை ஊற்றினபடியே இருந்தது. கவிழ்த்திய பானையை நிமிர்க்கவில்லை. அடுப்பில் எறிந்தத் தீ விறகை பற்றிக் கொண்டே வந்து வெளியே எறிந்துகொண்டிருந்தது.

மாரி உதை வாங்கிக்கொண்டு உட்கார்ந்த இடத்திலேயே இன்

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது IK 153

னும் இருந்தாள். செட்டியார் வெளியேறி வெகு நேரம் ஆயி னும் இன்னும் மாரி தன் அழு கையை விடவில்லை. முதன் முத லில் புருஷனை வாய் விட்டு ஏசி அழுதாள் எனினும் இப்போது தேம்புவதாலும் சளியை சிந்தி விட்டெறிவதிலேயும் இருந்தது.

செட்டியார் உதைத்தாரே, அந்த உதையின் வேதனைகூட அவளுக்கு பிரமாதமாக இல்லை. அடித்த அந்த சமயம் தான் அந்த வலி. ஆனால் அவர் நிலத் தைக் கட்டாயம் விற்கவேண்டு மென பிடிவாதம் செய்ததையும் அதன் விளைவாக அவளுடைய பெற்றோர்களை ஏளனமாகப் பேசியதையும் நினைக்க நினைக்க அவளுக்கு தாங்க வொண்ணாத தாக இருந்தது.

"அவுக கொடுத்த அன் னத்தை தின்றுகொண்டே அவு களை இப்படிப் பேசினா நல்ல துக்கா! ஒருக்காலும் விளங்கவே மாட்டா!" என அவள் புருஷனை சபித்துக் கொண்டிருந்தாள்.

அடுப்பிலிருந்த தீ விறகு முழு வதும் கரிந்து போனவுடன், அதுவும் அணைந்துவிட்டது. மாரிக்கும் நேரம் செல்லச்செல்ல செட்டியார் ஏசிய ஏச்சைகூட மறந்துவிட்டாள். ஆனால் அந்த ஒன்றரை ஏகர்நிலத்தை விற்கிற விஷயம் பாவம் அவளை விட வில்லை, இடியும் மின்னலும் போய்விட்டாலும் புயல் விட வில்லையே!

"இந்த ஒன்றரை ஏக்கர் நிலத்தை விற்கவேண்டுமென இவ்வளவு ஆத்திரம் ஏன்? ஏதோ, அப்பா அம்மா கொடுத்த வைகளில் பணம் காசு, நகைகள் எல்லாம் போயே போய் விட்டன். இந்த மண்ணுதானே மிச்சம். இதைக் கூட நான் உயி ருடன் இருக்கும் வரை வைத்து அனுபவிக்கக் கூடாதா?" என மாரியின் சிந்தனையில் அலை புரண்டது.

"இதுக்காக இப்படி கோபித்து போய் விட்டாரே. ஐயோ அடுப் பில் வைத்தவை!"

மாரிக்கு அப்போதுதான் அடுப்படி ஞாபகம்வந்தது. சமை யலறைக்குள் சென்றாள். அணை ந்த விறகை திரும்பவும் தீயிட்டு, விட்டுப் போன வேலையைத் தொடர்ந்தாள்.

"கோபித்துட்டு எந்தப் பக்கம் போனாரோ! அவன் சோமுகூட இல்லையே. இருந்தாலாச்சும் போய் தேடிவரச் சொல்லலாம். உம் அவர் நிலத்தை விற்கத் தான் வேண்டுமென்கிறார். அதை அவர் விற்றதனால் என்ன லாபம். அவர் வெளியே போய் நாலு இடம் பார்த்து பேசி வருகிறவர், நாலு விஷயமும் தெரிந்தவர். இந்த நிலத்தை விற்றால் அதைக் கொண்டு இங்கேயே வரும்படி வருகிறாப் போலே ஒரு சொத்து வாங்கி விடலாம். இது நல்ல விலை என்பதினால்தானே அவர் இவ்வ ளவு பாடுபடுகிறார், அந்த நிலத் தை விற்றுவிட்டால் அந்தப் பணத்தை வாயால் விழுங்கி விடுவதில்லையே. அப்பா வாங் கிக்கொடுத்த சொத்தே என்றா லும் அதை விற்று வேறு சொத்து வாங்கி விட்டால் அதுவும் அவர்கள் வாங்கிக் கொடுத்தது மாதிரிதானே. இது தெரியாமே வீணே கன்ன

பின்னானு கத்தி அவுகளையும் சாப்பிடாமே வெறட்டியூரச்சு. வரட்டும்" இவ்விதமாக மாரி யோசனை செய்து முடிவு செய்து கொண்டாள்.

தாளிக்க வேண்டியவைகளை இருப்புச் சட்டியில் போட்டு கரண்டியால் கிண்டி விட்டாள். அப்போது சுவரின் மேல் ஒட்டியிருந்த ஒரு பல்லி கீழே விழுந்தது. அடுப்புக்கு மேல், மாரி அதைப் பார்த்தவள் திரும் பவும் நன்றாய் உட்கார்ந்து கொண்டாள். அந்த பல்லியை இமை கொட்டாமல் அவள் பார்த்தாள்.

2

மாரியாயியுடைய தகப்பனா ரும் தாயாரும் இறந்து வெகு நாளாகி விட்டன. அவர் கள் இருக்கிறபோது மாரியாயி தன்னுடைய நிலத்தைப் பார்க் கச் சென்றிருந்தாள். அவளை அவனுடைய தகப்பனார் அழைத் துப் போயிருந்தார்.

நிலத்தின் வரப்பின் மேல் அவர்கள் நடந்து பார்வையிட்ட போது வெள்ளையன் அவர்களு க்கு நிலத்தைச் சுற்றிக் காட்டி னான். "அந்தோ-அந்த வரப் பிலே இருந்து இந்தப் பக்கமாய் ஒரு கல் நட்டுருக்கே, அதுவரைக் கும் நம்ம நிலம்." என வெள்ளை யன் காட்டினான்.

"மாரி, பாத்துக்கத்தா உன் நிலத்தை-"என அவளுடைய தந்தை மிகவும் பூரிப்புடன் சொன்னார்.

மாரியோ அந்த வார்த்தை களைக் கேட்டு வாய் பேச வும் முடியாமல் ஒரு புன் சிரிப்பிலேயே தன் ஆனந்தத்தை யும் திருப்தியையும் தெரிவித் தாள். அந்தச் சமயம் அந்த நிலத்திற்கு கிழக்கே-ஒரு மூலை யில் நின்ற கருவேல மரத்தில் கௌளியின் 'தெக்-தெக்' கெனும் சப்தம் கேட்டது.

'அம்மா, உங்களுக்கு நல்ல அதிஷ்டமா! ஐயர் சொல்லவும் எங்க அய்யனார் சாமியும் உத் திரவு கொடுத்திட்டாரு-" என வெள்ளையன் சொன்னான்.

மாரி சுவரிலிருந்து விழுந்த பல்லியைப் பார்க்கவும் 15-வருஷத்திற்கு முந்திய சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது, இப் போது தான் நடக்கிறதை அவள் அனுபவிப்பதாக உணர்ந் தாள்.

வெள்ளையன் நிலத்தின் விஸ் திரணத்தைக் காட்டியதும் அவ ளுடைய தந்தை "மாரி பார்த்து கத்தா உன் நிலத்தை என்றதும் பல்லி சப்தித்ததையும் மறுபடி யும் அவள் நினைத்தாள்.

"உங்களுக்கு நல்ல அதிர்ஷ் டம்மா!" என வெள்ளையன் சொன்னதும் கொஞ்சம் நேரத் திற்கு முன்தான் கூறியது போல் அவளுக்கு இருந்தது. "உன் நிலம்" அது என் நிலம். நான் விற்கவா என் தந்தை எனக் குக் கொடுத்தது. அவர் என்னை அழைத்து, அந்த வரப்பின் மேல் நின்று கொண்டு காட்டிய அந்த நிலம். அய்யனார் உத்தரவு தந்த அந்த நிலம், அதை நான் விற்கவா? அதை விற்பதால் அதி லும் பெரிய சொத்து கிடைக்க லாம். பணம்கூட அடையலாம். ஆனால் என் அப்பா வரப்பின் மேலிருந்து காட்டிய அந்த நிலம் கிடைக்குமா? அந்த வெள்ளை

யனைப் பெறமுடியுமா? தை மாதம் நெருங்கிக்கொண்டிருக் கிறபோதே பூசணிப்பழத்துடன் விடிவதற்குள் வந்து "அம்மா!" என அன்புடன் அழைக்கும் அந்த வயோதிக உருவத்தைப் பெறமுடியுமா? முடியாது. வேறு எந்த பாக்யம் கிடைத்தாலும் நான் அந்த நிலத்தை விற்கவே மாட்டேன், அவர் காலில் விழுந்தாவது கெஞ்சுகிறேன்"

மாரியாயியின் தீர்மானம் இவ் விதமாக மாறிவிட்டது. இதில் மிகவும் உறுதியாக இருந்தாள் என்றாலும், புருஷன் அதற்காக கோபித்து வெளியேறியதை நினைக்கக் கொஞ்சம் சபலமும் தட்டியது.

செட்டியார் இன்னும் திரும்பி வரவில்லை. பக லும் கடந்து இரவும் வந்து விட் டது. மாரியும் இன்னும் அன் னம் தண்ணீர்கூட இல்லாமல் ஏங்கி இருந்தாள். வீட்டின் நிலையினருகில் நின்றுகொண்டே கண்ணில் தென்படுபவர்களிட மெல்லாம் செட்டியாரைப்பற்றி விசாரித்தாள். பயனில்லை. இத னால் மாரிக்கு பெரிதும் விசனம் மூண்டு வாடிவிட்டாள்.

அவள் ஏக்கத்தை தீர்க்க ஒருவன்தோன்றினான், "ஐயோ, என்ன அண்ணி? பாவம், அண் ணன் கோ வென அழுதுகிட்டு எங்க திண்ணையில் கிடக்கிறாரு. கொஞ்சம் சாப்பிடுங்களென எவ்வளவோ சொன்னாலும் கேட்கிறாரில்லை" என அவன் சொன்னான்.

மாரிக்கு தூக்கிவாரிப்போட் டாற்போலிருந்தது. வீட்டுக் கதவை பூட்டிவிட்டு வேகமாக வந்தாள். செட்டியாரை எழு ந்துவரும்படி கெஞ்சினாள்.

"ஒரு பொம்பளையினாலே, ஆம்பளே பேசின பேச்சு வீணாப் போறதா? நீ போ, உன் நிலத்தி லேயே குடி இரு. போ என்னை மட்டும் கூப்பிடாதே!" என்றார்.

மாரியின் மனம் கொந்தளித் தது. ஏன் ஜனனம் எடுத் தோம் என்று அவளுக்குத் தோன்றியது. கணவனை திருப்தி செய்வதா? அல்லது தன் வாழ்க் கையிலேயே பெரும் பீதியை ஏற்பதா? அந்த நிலத்தில் தனக் கிருக்கும் அவ்வளவு அவாவை யும் அவர் அறிந்து கொள்ள முடியவில்லையே. எப்படியிருந் தாலும் அவர் திருப்தி அடைய வேண்டும். நம் அவர் நம்முள் ளத்திலேயே சாகட்டும், அவரு டைய ஆசைக்கு இணங்குவோம் என நினைத்தாள்.

"உங்கள்—இஷ்டம் போல் செய்யலாம். வாங்க சாப்பிட" என மாரிசொன்னாள். முந்தா ணித் துணியால் முகத்தைத் துடைத்துக் கொண்டாள்.

சப் ரிஜிஸ்திரார் ஆபீஸில் கிர யப் பத்திரம் பதிவானது. மாரி கையெழுத்திட்டாள். அது வரை அவளுடைய மனம் எத் தனையோ தடவை மாறி மாறி இருக்கும். அவளுடைய தந்தை யும் வெள்ளையனும், வரப்பும், கல் தூணும் வேல மரமும், சிறு செடிகளும் நாத்துகளும் அவள் முன்வந்திருக்கும். கடைசி யாக கையெழுத்துப் போடும் போதும் அந்தக் குழப்பம்தான்.

கோபால்சாமி செட்டியாரி டம் மாரி கிரய ரூபாய்களைக் கொடுத்தாள். அப்போது கௌளி கத்தியது. மாரியின் மனம் திடுக்கிட்டது. அந்த வெள்ளையன் ஞாபகம் வந்தது. "அம்மா, உங்களுக்கு இனி அதிர்ஷ்டம்தான்" எனச் சொல்ல! அந்த வெள்ளையன் இல்லையே என, அவள் மனம் ஏங்கியது. கண்களில் நீர்த் துளி கள் சிந்தின.

"என் மாரி, பைத்தியகாரி யாட்டம் அழலாமா? கண்ணீ ரைத் தொடை" என கோபால் சாமி செட்டியார் தேறுதல் சொன்னார்.

"ஒன்றுமில்லை". என மாரி மென்றாள்.

பின் கண்ணீர் கலங்கலாமா? முதன் முதலாய் பணம் வாங் கிட்டு போகையிலே" என்றார் செட்டியார்.

"உம் ஒன்றுமில்லை. அடுத் தாப்புலே தை பிறக்கவும் நம் வெள்ளையன் வந்து அம்மா நெல் வண்டி வந்துருக்குங்க" எனச் சொல்லக் கேட்கப் போகிறேனா எனத்தான் துக்கம் என்றாள்.

கண்ணீரோ மளமளவெனக் கொட்டியது.

காலையில் எழுந்து செய்யவேண்டிய விதிகள்



1 சோம்பலை நன்கு முறித்தல்;

2 கூந்தல் அடர்த்தியாக வும் அழகிய மேனியுடனு மிருக்க, கூந்தல் தேங்கா யெண்ணெயை கூந்தலில் தடவி நன்றாய் தேய்த்தல்

3 பிறகு சீப்பு அல்லது புருஷ் ஷால் கூந்தலை நன்கு வாரி சீர் படுத்தவும். உடனே கவனித் தால் இந்த நேர்த்தியான கூந் தல் தைலம் உங்கள் கூந்தலுக்கு எவ்வளவு மிருதுத் தன்மையை யும் மேனியையும் அளிக்கிற தென்பதை அறிவீர்கள்!

உங்கள் கூந்தல் அழகுக்கும் ஆரோக் கியத்திற்கும் எப்போதும் டாம்கோ பரிமள கூந்தல் தேங்கா யெண்ணெ யை உபயோகியுங்கள். எல்லா பிர பல கடைகளிலும் கிடைக்கும்.

டாம்கோ
பரிமளக் கூந்தல்
தேங்கா யெண்ணெய்.

A TATA PRODUCT

டாம்கோ விற்பனை இலாகா,
1, வாரன் ரோட் பீமன்பேட், மைலாப்பூர், மதராஸ்.

தயாரிப்போர் :-
தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமி., டாடாபுரம் & பம்பாய்.

TH. 2394.

மாசு மருவு அன்னியில்



சோபனா ஸமரத்

சொல்லுகிறார் சருமத்தை
எளிதில் பாதுகாற்கலாம் என்று

"என் சருமத்தைப் பாதுகாக்க நான் தினமும் செய்வது வேறு ஒன்றுமில்லை. சருமத்தை அழகாய் வைத்துக்கொள்ள லக்ஸ் டாய்லெட் சோப்பை உபயோகிக்கிறேன். நீங்களும் இந்த முறையைச் செய்து பாருங்கள். சருமத்தை அதிக மேன்மை யாக செய்கிறது". என்று அழகிய சோபனா சொல்லுகிறார்.

லக்ஸ் டாய்லெட் சோப்

சினிமா நடிகளின் சுந்திர சோப்

LTS. 57-172 TM. LEVER BROTHERS (INDIA) LIMITED

சேவை.

மிகவும் உபயோகிக்கப்படும் இந்த வார்த்தையின் உண்மை அர்த்த த்தை நாங்களும் எங்கள் பாலிஸி தாரர்களும் நன்கு உணர்கிறோம். எல்லோரும் சேர்ந்து உதவுவது என்னும் உபகார சிந்தையையே அடிப்படையாகக் கொண்ட இன் ஷூரன்ஸ் தொழிலுக்கு இதுவே மூலமந்திரம்.

சென்ற 36 ஆண்டுகளாக ஸேவை புரிந்து வரும் அனுபவம் மிகுந்த யுனைடெட் இந்தியாவை நீங்கள் இன்றும் சரி, எதிர்காலத்திற்கும் சரி, பூர்ணமாய் நம்பலாம். அதன் பாலிஸிதாரர்களின் தேவை களை அது ஒரு போதும் மறப் பது கிடையாது.

யுனைடெட் இந்தியா
லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

'யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்'
எஸ்ப்ளனேட் : : : மதராஸ்.

டிரஸ்டி:சென்னை சர்க்காரின் அபீஷியல் டிரஸ்டி.

இந்தியாவெங்கும் பிராஞ்சுகளும், ஏஜன்ஸிகளும் உள்ளன

FOR FIRE & MOTOR CAR INSURANCE.
CONSULT
UNITED INDIA FIRE & GENERAL INSURANCE Co., Ltd.,
UNITED INDIA LIFE BUILDING
Esplanade MADRAS.
Telephone 4241 P. O. Box 1207 Grams : UNIGEN.

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்

பொதுமக்களுக்கு அளிக்கப்படுகின்றன



"லண்டன் நியூ கோல்டால்" இப் பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப் பட்டவை. இதை உலகத்தின் எட்டா வது அதிசயம் என்றே சொல்லலாம்- இது இப்பொழுது இந்தியா முழுவ தும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. பொதுமக்களும, பத் திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிறார்கள். இந்த கெமிகல் தங்கத் தின் நிறம் மாறாமலிருப்பதால் இதி லிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப் பொழுது 6 தோல "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளையல்கள் 2ஜதை தோடுகள் 2மோதிரங்கள் மிகவும் அழ காகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும். இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத் தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக்இனும்.

London Commercial Co.,
(S.M.M.) LAHORE (India)



கே.சுவாமிநாதன்&கோ

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சிக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் பவுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.



பிராஞ்சு:- பெனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

சிறுவர் கதை

தந்திரவாதி

ஆர். மருதப்பா

கோசல தேசத்தின் சமீபம் ஒரு காடு இருந்தது. அந்த காட்டில் ஒரு மந்திரவாதி இருந்தான். அவன் சகல மந்திர வித்தைகளிலும் தேர்ச்சி பெற்றவன். ரொம்பவும் பொல்லாதவன் கூட. அவனுக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. அந்தக் குழந்தைக்கு வயது வந்ததும் தனக்குத் தெரிந்த சகல விதமான மந்திர வித்தைகளையும் கற்பித்தான்.

அவளுக்கு விவாக வயது வந்தது. அரசகுமாரியைப் போல் அழகுடன் விளங்கினாள். அதைக் கண்ட மந்திரவாதி அவளைக் கோசல தேசத்து அரசனுக்கு விவாகம் செய்து, அந் நாட்டிற்கு அரசியாக்க எண்ணினான். தன் மந்திர சக்தியால் அரசனை மயக்கினான். விவாகமும் நடந்தது.

மந்திர மங்கை அரசியானதில் குடி ஜனங்களுக்குக் கொஞ்சமும் சம்மதமில்லை.

கொஞ்ச நாளைக்குப் பிறகு ராஜீய விஷயங்களில் தலையிட்டாள், அது அரசனுக்குப் பிடிக்கவில்லை. அவளைக் கண்டித்தான். அவளுக்கு கோபம் வந்து விட்டது. ஏதோ மந்திரத்தை ஜபித்தாள். அரசன் பெட்டிப் பாம்பைப்போல் அடங்கி விட்டான். உடனே அரசனின் கை கால்களுக்கு விலங்கிட்டு ஓர் அறையில் அடைத்து விட்டாள்.

ஏற்கனவே அவள் மீது வெறுப்படைந்திருந்த குடி ஜனங்களுக்கு இந்த விஷயம் தெரிந்ததும் கோபம் அதிகரித்தது. எல்லோரும் ஒன்று கூடி ஆரவாரம் செய்தார்கள். அதைக் கண்ட அரசி ஏதோ மந்திரத்தை ஜபித்து அவர்களெல்லோரையும் கல்லாய் சபித்தாள். ஊரெங்கும் ஒரே நிசப்தம் குடிகொண்டது. இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த மந்திரி அரசியிடம் வெகு தந்திரமாக நடந்து கொண்டார். எனினும் அரசியைக் கொன்று அரசனையும் ஜனங்களையும் மீட்க வேண்டியது தன் கடமை என்பதை அவர் மறக்கவில்லை. சமயத்தை எதிர் பார்த்திருந்தார்.

ஒரு நாள் அரசி மந்திரியைக் கூப்பிட்டு காட்டிற்கு சென்று தன் தந்தையை அழைத்து வரும்படி சொன்னாள். அதைக் கேட்ட மந்திரி சந்தோஷம் கொண்டு மந்திரவாதி இருக்கும் காட்டிற்குச் சென்றான். மந்திரியின் வரவைக் கண்ட மந்திரவாதி "எங்கு வந்தாய்? உமது அரசியும் அரசரும் க்ஷேமம் தானா?" என்றான்.

மந்திரவாதியின் வார்த்தைக்கு பதில் சொல்லாமல் விக்கி விக்கி அழ ஆரம்பித்தான் மந்திரி. மந்திரவாதிக்கு, தூக்கி வாரிப் போட்டது. மந்திரியின் அழுகையை நிறுத்தச் செய்து விஷயத்தை விசாரித்தான்.

மந்திரி, "ஐயா விஷயத்தை சொல்லவும் வாய்வரவில்லை. சொல்லாமலிருக்கவும் முடியவில்லை. 'அரசி மார் படைப்பினால் இறந்தார்கள்'" என்றான்.

அதைக் கேட்ட மந்திரவாதி தரையில் விழுந்து மூர்ச்சையானான். இது தான் சமயம் என்று மந்திரி மந்திரவாதியைக் கொன்று விட்டு அவன் உடைகளைத் தான் உடுத்திக் கொண்டு அன்றிரவு அரண்மனைக்கு வந்தான். மந்திரியைத் தன் தந்தை என்று நினைத்த மந்திர மங்கை ஆனந்தத்துடன் அவனை வரவேற்றாள்.

மந்திரி முகத்தை சற்று மறைத்தபடி "குழந்தாய், இதென்ன ஊர் பூராவும் ஒரே நிசப்தமாயிருக்கிறதே" என்றார்.

அரசி, "இந்த விஷயத்தைப் பற்றி மந்திரி தங்களுடன் ஒன்றும் சொல்லவில்லையா" என்றாள். "அவன் ஒன்றும் சொல்லவில்லையே" என்றார் மந்திரி.

அரசி நடந்த விஷயம் பூராவையும் சொன்னாள். அதைக் கேட்ட மந்திரி "குழந்தாய், நீ செய்தது சுத்த தவறான காரியம். ராஜ்யத்தை நீ அடைய வேண்டுமானால், அரசனை சிறை செய்தோ அல்லது கொன்றோ அடையலாம். குடி மக்கள் இல்லாமல் நீ எப்படி ராஜ்யத்தை ஆள முடியும்? ஜனங்களை உன் சாபத்தினின்று மீட்டுவிடு அரசனையும் விடுதலைச் செய். பிறகு நான் இந்த ராஜ்யத்தை உனக்கு முடி சூட்டி வைத்து அரசனை உனக்கு அடிமையாக்கி வைத்து விட்டு போகிறேன்" என்றான்.

அதற்குச் சம்மதித்த மந்திர மங்கை ஜனங்களை பழயபடி உயிர்ப்பிக்கச் செய்து, தன் தந்தையுடன் அரசன் அடைக்கப்பட்டிருந்த இடத்திற்குச் சென்று அரசனையும் விடுவித்தாள். இது தான் சமயம் என்றுணர்ந்த மந்திரி தன் இடையில் வைத்திருந்த கத்தியை எடுத்து ஒரே அடியில் அரசியைக் கொன்று விட்டான்.

ஜனங்கள் மந்திரியின் சாமர்த்தியத்தைப் பற்றி அவனைப் போற்றினார்கள்.

நபுண்சகத் விரோதி

அம்ருதம் போன்ற ஏ. பி. யாகுடி

இளமையும், வீரியமும் அளிக்கும் ஔஷதம். ரத்தசுத்தியளித்து, தளர்ந்த நரம்புகளுக்கு வலுவூட்டி, வீரிய விருத்தியளித்து, இல்லற வாழ்க்கையை இன்பமாய்க்கழிக்க உதவும். பாட்டில் ரூ. 10.

ஏ. பி. எண்ணெய்.

வெளிப்பூச்சுக்கு; எல்லா தோஷங்களையும் நிவர்த்திக்கும் அருமையான தைலம் பாட்டில் ரூ. 15.

மதன மஞ்சரி பார்மஸி,
184, சைனபஜார் ரோடு, மதராஸ்.

குறைந்த விலையில் கொசு வலைகள்



எமது வலைகள் அழுத்தமானவை. நான்கு மூலைகள் நன்கு தைக்கப்பட்டவை. எல்லா வர்ணமும் கிடைக்கும்.

நீளம்	அகலம்	உயரம்	சாதா ரூ	உயர் ரூ.
6 அடி	$3\frac{1}{2}$ அடி	$3\frac{1}{2}$ அடி	3-2	5-8
6 ,,	4 ,,	4 ,,	4-2	7-4
$6\frac{1}{2}$,,	$4\frac{1}{2}$,,	$4\frac{1}{2}$,,	4-6	8-0
7 ,,	5 ,,	5 ,,	4-10	9-3
$7\frac{1}{2}$,,	6 ,,	6 ,,	5-5	10-0

மூன்று சேர்ந்தாற்போல் வாங்கினால் 6 அடி X 4 அடி X 4 அடி வலை ஒன்று இனம். ஒவ்வொரு இனத்திற்கும் தபால் சார்ஜ் பிரத்யேகம். ஆங்கிலத்தில் எழுதவும்.

CALCUTTA CLOCK CO., (T 64)
15/1, Jay Mitter St.,
P. O. Hatkhola. Calcutta.

சந்தேகம் வேண்டாம்!

கேஸ்ரின்

ஒவ்வொரு துளியும் கேஸத்தை வளர்க்கும் சத்து!

கேஸத்திற்கு அழகு தரும்

எங்கும் கிடைக்கும்

விக்டோரியா டிப்போ, மைலாப்பூர், சென்னை

கால் புண்கள் மூலம் கெடுதி ஏற்படும்படி விடாதீர்கள்

ஜாம்-பெக் வலியைப் போக்கி, மாயமாய் குணப்படுத்தும்.

ஜாம்-பெக் வலியைச் சமனப்படுத்தி, சிரங்கு, ரணம், கால புண்களிலிருந்து சீழ் வடிதலைக் கண்டு ஆச்சரியமடைவீர்கள். ஜாம்-பெக் மெழுகை தடவி கட்டிவிடுங்கள். ஜாம்-பெக்கிலுள்ள அற்புத மூலிகை ஆயில் சுலபமாக சருமத்திற்குள் செல்லுகின்றது. வீக்கம். வலி குறைந்து விடுகின்றது. ஜாம்பெக் தழும்பின்றி குணப்படுத்தும். ஜாம்-பெக் மெழுகு ரூ. 1 அல்லது 2—4. ஸோப் ரூ. 1. பவுடர் ரூ. 1. ஏஜண்டுகள்:—மெஸர்ஸ் காதா அண்டு கம்பெனி, பி. டி., மதராஸ்.

எப்பொழுதும் ஜாம்-பெக் உபயோகியுங்கள்.

ZAM-BUK

மிருகக் கொழுப்பற்றது.

'ராமேஸ்வரம் போனாலும்...'

★

ஸ்ரீ வி. ஸி. கோபாலரத்னம் எழுதியது

★

ஸ்ரீமான் வி. ஸி. கோபாலரத்னம் எழுதியுள்ள வாக்கியங்களைப் படிப்பவர் அவற்றின் ஹாஸ்யச் சுவையின் இன்பத்தை அனுபவிக்காமல் இருக்க முடியாது. அளவு மீறிய ஹாஸ்யமல்ல: ஆனந்தமளிக்கும் ஹாஸ்யம்! உள்ளத்தில் கவலை குடிகொண்டிருக்கிறதா? அப்படியானால் இதைப் படியுங்கள்! இந்தக் கட்டுரை பூராவும் வேடிக்கை மயமானது. எந்த நபரையும் குறிப்பிடுவதல்ல: பொழுது போக்குக்கான சாதனமே தவிர இது வேறில்லை. பாஷை சில இடங்களில் ,,கொச்சையாக''வே இருக்கக்கூடும்: இதற்குக் காரணம் பேசும் தமிழை எழுத்தில் புகுத்தியிருப்பது தான். இதைக் குற்றமாகக் கருதினால் கட்டுரையின் ஸ்வாரஸ்யமே போய்விடுமல்லவா?

பழைய காலத்திலே, ரயில் வண்டி, தந்தி எல்லாம் வருவதற்கு முன் யாரையாவது சனீச்வரன் பிடித்துக்கொண்டால், அவர் அதை ஏழரை வருஷம் அனுபவித்தேதீரவேண்டும்: இல்லாதபோனால் ராமேஸ்வரத்துக்காவது போகவேண்டும். வேறு வழி ஒன்றும் கிடையாது. சாதாரணமாக ராமேஸ்வரம் போவதானால், அவ்வளவு சுலப சாத்தியமான காரியமில்லை, கட்டை வண்டிகளிலே கஷ்டப்பட்டுக்கொண்டு போகவேண்டும். உடம்புக்கு ஆட்டம் அலட்டல் அசாத்யம். ராமேஸ்வரத்திற்கு கிளம்பும்போது, தனியாய்ப் போகமுடியாது. அகத்தில் அகமுடையாள். பசங்கள், வேலைக்காரன் சகிதமாகத்தான் புறப்படவேண்டியிருக்கிறது. போதாக்குறைக்கு அத்தான், அம்மாஞ்சி, மச்சினி, சம்மந்தியாத்து பாட்டி, இந்தமாதிரியாக உப பரிவாரங்கள் கட்டாயமாகச் சேர்ந்துவிடும். செலவு தலையைச் சாப்பிட்டுவிடும் போதாக்குறைக்கு, மதுரையைத் தாண்டினால், ராமேச்வரம் போய் சேருகிறவரை நித்ய கண்டம் பூர்ணாயுசு தான் திருடர் பயம் பிரமாதம்! இதெல்லாம் போதாத குறைக்கு ராமேச்வரம், தனுஷ்கோடி, புல்லாரண்யம் நவபாஷாணம் இந்த மாதிரி இடங்களிலே ஸ்நானம். ஸர்ப்ப சாந்தி, ப்ரீதிகளையெல்லாம் நடத்தி, தலை தப்பித் திரும்பி வருவது தம்பிரான் புண்ணியம் தான்! கணக்கே தெரியாது? கையிலே கொண்டு போனது மொத்தமும் கரையான் கறைக்கிறப்போல் கறைந்துவிடும். நடுவிலே நோவு—நொடி, மருந்து மாயம், இவை வேறு இவ்வளவு பெரிய விஷயம் ராமேச்வரம் போவது! ஆகையாலே அனேகம் பேர் இந்தத்தொல்லைகளையெல்லாம் அனுபவித்துத் திண்டாடுவதைவிட சனீச்வரனே தேவலை என்று சும்மா இருந்து விடுவார்கள். இதையெல்லாம் அனுஸரித்துத்தான் "ராமேஸ்வரம் போனாலும் சனீச்வரன் விடலேன்னு" என்பதை ஒரு பெரிய ஆச்சர்யமான விஷயமாகச் சொல்வது வழக்கம்.

இந்தக் காலத்திலே இந்தப் பழமொழிக்கு அர்த்தமே கிடையாது. இருந்தாலும் நாமும் அதை விடமாட்டோம். காலப்போக்கு எவ்வளவுதான மாறட்டும், தேசாசாரம் நடவடிக்கைகள், அபிப்ராயங்கள், எல்லாம் எவ்வளவு தான் புதுசு புதுசா ஏற்படட்டும், நம் பழமொழிகள் மாத்திரம் நம்மை விடா. ராமேச்வரம் போனாலும் சனீச்வரன் விடாது என்று சொல்வது நம் பழமொழிகள் விஷயத்திலே ரொம்ப வாஸ்தவம். தள்ளுங்கள் விஷயத்தை: வேறு ஏதாவது பேசுவோம்.

எதற்குச் சொல்ல வந்தேன் என்றால் இந்த வக்கீல் வேலையே இப்போ ரொம்ப இதுவாப் போச்சு...எதுவாப் போச்சு என்கிறீர்களோ!...! அதான்...ரொம்பகஷ்டங்களும், உபத்திரவங்களும ஜாஸ்தியாகிக் கொண்டே வருகின்றன ஆனால், வரும்படியும், ஹோதாவும் குறைந்து கொண்டே வருகிறது. இதனாலே இதர தொழில்களிலே கஷ்டங்களும் கடுமைகளும் இல்லை என்று நான் சொல்ல வரவில்லை. எல்லா தொழில்களிலேயும், தொந்தரவு. தொல்லைகள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், அவர்கள் எல்லாம், ஏதோ அப்போ அப்போ கொஞ்சம் ரஜா வாங்கிக்கொண்டோ, இடம் மாற்றிக்கொண்டோ, கொஞ்ச காலம் அவைகளையெல்லாம் மறந்துவிட்டு ஹாயா இருக்க முடியும். ஆனால், இந்த வக்கீல் வேலையிலே, மாத்திரம் அது ஒரு நாளும் முடியாது. அது ஒரு சாபம போலிருக்கு!

போகட்டும், ஏதோ இந்த வருஷம் தான் ஏப்ரல் மாதத்திலே சண்டை நெருங்கி வந்ததிலிருந்து, கோயம்புத்தூரா, அனந்தபூரா, திருவள்ளூரா, செங்கல்பட்டா என்று அலைந்து விட்டு, கடைசிலே மாம்பலத்துக்கு வந்து மாமரத்தின் கீழேயும், மாட்டுக் கொட்டாய் உள்ளேயும், மாடிப்படி மேலேயும் மாட்சிமையோடு உத்யோகம் நடத்துகிறோம். இதற்கு யாரையும் குற்றம் சொல்வதற்கில்லை. விதிவசம இவ்வளவுக்காவது இப்போது இருக்கே என்று சந்தோஷப்பட வேண்டியது தான். ஆனால், போன வருஷம் ஒன்றும் நடக்கவில்லையே? எங்க பெரிய கட்டிடத்திலேயே உள்ளூரிலேயே கௌரவமாகவே வேலை நடந்து வந்ததோன்னோ? ஆனாலும் தொழிலிலே தொல்லைகளுக்கு ஏதாவது குறைச்சலா? வேண்டியது இருந்தது!

எங்க வக்கீல் வேலையே ஒரு அலாதி...அப்படீன்னு? நான் தற்புகழ்ச்சியா சொல்வது போலே நினைக்கக்கூடாது. இந்தத் தொழிலிலே மூளைக்கு ரொம்ப வேலை அதிகம். ஒரு நாள் முழுக்க மண்வெட்டியாலே கொத்திக் கூட ஒரு ராத்திரி நல்ல தூக்கம் இருந்தால் போதும்! பழைய பலமும், தென்பும் வந்து விடும். ஆனால், ஒரு நாள் முழுதும் மூளையால் வேலை செய்து களைத்துப் போனால் அதற்கு அநேக நாள் லீவு கொடுக்க வேண்டும். இன்னும ரொம்ப சிகிச்சைகள் செய்ய வேண்டும்... இது யாருக்கும் தெரிந்த விஷயம்...மறுக்க முடியாது.

மாசம் ஏப்ரல் கடைசியாப் போச்சு; வெயில் தகிச்சுக்கொல்லுகிறது. கோர்ட்டு சாத்த இன்னும் 10-நாளுக்கு மேலே இருக்கு. காலையில் எழுந்தால் கட்சிக்காரர்கள் வந்து காக்காயாட்டமா பிடுங்கறா: காசைக் கேட்டா காதிலே போட்டுக்காமல் காதவழி தூரம் ஓடிப்போறான். அதிலே ஒத்தன் ரெண்டு பேர் காலே அரைக்கால் ரூபாயைக் கொடுத்துவிட்டு கார் பார் பண்ணிக் கொண்டே இருக்கறான். குளிக்கப்போனால் கூடவே வருகிறான், படுக்கப் போனால் பக்கத்திலேயே வந்து படுத்து விடுவான் போலிருக்கு சாப்பிடப் போனால் 'ஸார், ஸார்'னு கத்திக்கொண்டே சாத்தின கதவைத் திறந்து கொண்டு வந்துவிடறான். அவனைத் தப்பி போவதற்குள் ஒரு பக்ஷியாக மாறிப் பறந்து போனால்தான் சாத்யம்.

கோர்ட்டுக்குப் போனால் கேட்க வேண்டியதேயில்லை. பத்தரை மணியிலிருந்து நாலரை மணி வரைக்கும், நாய் படாதபாடு தான் ஜட்ஜு தயாராக இருக்கிற கேஸைத் தள்ளிப் போட்டுவிட்டு, கக்ஷிக்காரன், சாக்ஷி ஒருவரும் வராத கேஸை நடத்தச் சொல்லி நிர்ப்பந்தப் படுத்துவார். இல்லை, அதற்கு முன்னமேயே. எப்படியாவது சரிப்படுத்திக்கலாமென்று நினைத்து எதிர்க்கட்சி வக்கீலைக் கேட்டால் எறஞ்சு விழுவான். எங்கேயாவது ஒரு மூலையிலே போய் உட்கார்ந்து எதையாவது கேஸ் விஷயங்களைப் படிக்கலாமென்று ஆரம்பித்தால் வேலையே இல்லாமல வெட்டியாளாகத் திரிந்து வரும் வக்கீல்கள் நாலு பேர் வந்து சூழ்ந்து கொண்டு 'ஙொவள'ன்னு கத்த ஆரம்பிப்பார்கள். இந்த ஜட்ஜுக்கு மூக்கு; கோணல், அந்த பெரிய வக்கீலுக்குப பேசவே தெரியாது.' இந்த மாதிரி ஏதாவது வம்புகளையே பேசிக் கொண்டு நம்மை ஒரு அக்ஷரம் படிக்கவிட மாட்டார். நரக வேதனைதான், அந்த பத்து நாளும பத்து யுகமாக் கழிந்தது. கோர்ட்டு என்ற பேரைக் கேட்கும போதே கோம்பை நாய்க்கு வருவது போல் கோபம் வர ஆரம்பித்தது, கக்ஷிக்காரனைக் காணும் போது, கல்லெடுத்து அடிக்கலாம் போல ஆய்விட்டது. ஜட்ஜுகளைப்பற்றி நினைக்கையில...! ஸரி, எப்படி இருந்திருக்கும்; சொல்லாமலெ தெரிந்து கொள்ளலாம்.

ஸரி. இந்த கஷ்டத்தை யெல்லாம் மறந்து, ஒரு மாதமாவது எங்கேயாவது போய் ஏகாந்தமாயிருந்து உடம்பையும் மனஸையும் தேற்றி விட்டு வரலாமென்று நினைத்து, ரொம்ப தூரத்திலே இருக்கிற ஒரு ஊருக்கு எழுதி, எல்லா ஏற்பாடுகளையும் செய்து முடிச்சேன். பத்து நாள் பத்துயுகமாப் போச்சு. கோர்ட்டு சாத்தறதினம் கூட வீட்டுக்கு வர நேரமாய்ப் போய் அடித்துக் கட்டிக் கொண்டு ஓடி அஞ்சு நிமிஷம் இருக்கும் போது ரயிலைப்பிடித்தேன். ஆனந்தமா சாய்ந்து ஆச்வாசப்படுத்திக்கொண்டு உட்கார்ந்தேன். ரயில் கிளம்ப ஒரு நிமிஷம் இருக்கும், ஒரு மலைசாமானை கொண்டு வந்து

கண்ணன் காட்சி

"தமிழன்" எழுதியது

கண்ணன் பிறந்து ஒரு மாதம் ஆயிற்று. அசோதைப் பிராட்டி இடைப் பெண்கள் எல்லோரையும் அழைத்து, திருவிழாக் கொண்டாடினாள். கண்ணனை அலங்கரித்துத் தொட்டிலிலே விட்டார்கள். குழந்தை தன் கால்விரல்களைக் கையால் பிடித்து வாயிலே வைத்துச் சுவைத்தான். அதைக் கண்ட ஒருத்தி, "தோழீ! இதோ பார்! தேவகி தேவி பெற்றெடுத்து நம்முடைய தேவி அசோதைக்குப் பிள்ளையாகத் தந்த இந்தக் குழந்தையை, இவன் பிடித்துச் சுவைத் துண்ணும் பாதக் கமலங்களைப் பார்" என்றாள். அந்த ஆனந்தக் காட்சியைக் கண்ட தோழி, "அடியே! பத்து விரலும் எப்படி ஒத்தாற்போல இருக்கின்றன. முத்தும் மணியும், வைரமும், பொன்னும் பதித்தாற்போல எவ்வளவு அழகாக இருக்கின்றன, பார்த்தாயா" என்றாள்.

"இணைக்காலிலே வெள்ளிக் தளைபோட்டிருப்பதைப் பார்த்தாயா?" என்றாள் இன்னொருத்தி. "முழங்காலைப் பார்த்தாயா? தொடைகள்தாம் என்ன அழகு! பவழமும் முத்தும் கோத்துக்கட்டின அரை ஞாணும் இடையும் என்ன சேர்த்தி!" என்றாள் மற்றொருத்தி. "நன்றும் அழகிய உந்தி இருந்தவா, காணீரே! ஒளியிழையீர்! வந்து காணீரே!" என்றாள் ஓர் இடைச்சி. "மதுர முலையூட்டிக் கிடந்த இந்தப்பிள்ளையின் உதரத்தைப் பார்" என்றாள் வேறொருத்தி. "திருமார்பிலே மணிப்பூண் திகழ்வதைப் பார்" என்றும், "தோள்களைப் பார்" என்றும், "இவனுடையகைத் தலத்திலே சங்க ரேகையும் சக்கரரேகையும் இருப்பன, பார்" என்றும், "இவனுடைய கண்டம் இருந்தவாறு என்னே!" என்றும் கோபிகள் ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டார்கள்.

"தொண்டைப் பழத்தைப்போலச் சிவந்த உதடுகளைப்பார்; இவனுடைய அதரத்தில் ஊறும் அமுதத்தைப் பருகவே, நேற்று இவனை ஒக்கலிலே எடுத்துக்கொண்டு போனேன்" என்றாள். அசோதையின் தோழி. கண்ணனுடைய கண்ணழகும் புருவங்களின் அழகும், நெற்றியழகும் அனைவரையும் வசீகரித்தன. காதுகளிலே மகரக் குழைகளைப்பார்" என்றாள் ஒரு தோழி. "குழல்கள் இருந்தவாறு காணாய்" என்றாள் வேறொருத்தி. இவ்வாறு பாதாதி கேசமாக கண்ணன் வடிவழகைக் கண்டு கோப ஸ்திரீகள் ஆனந்தமடைந்தார்கள், அப்பொழுது, ஒருத்தி, "இந்தப் பொன் தொட்டில் ஏது, தெரியுமா? பிரமதேவன் அனுப்பியதாக்கும்" என்றாள்.

"இந்த மாதுளம் பூமாலை?" "அதா? அது கபாலீசுவரன் அனுப்பியது" என்றாள். "இதோ பார்த்தாயா, இவனுடைய பாதங்களிலேயுள்ள கிண்கிணிகளை? இவற்றை இந்திரன் பாத காணிக்கையாக அனுப்பினான். கைகளுக்குச் சரிவளைகளையும் அரை ஞாணும் தேவர்கள் அனுப்பினர்கள். குபேரன் குழந்தையின் திருமார்புக்கு ஏற்ற ஐம்படைத்தாலியும் நவரத்தினமாலையும் நேரே கொண்டு வந்து கொடுத்தான்: இந்த முத்தாரம் வருணன் தந்தது; சங்கு மாலையும் பவழ மாலையும்கூட அவன் தந்தவையே, துளசி மாலையும் கற்பகப் பூமாலையும் ஸாக்ஷாத் லக்ஷ்மீ தேவியே அனுப்பினாள்; பூமாதேவி மட்டும் சும்மா இருப்பாளா? அவள் அனுப்பியது தான் இந்த உச்சி மணிச் சுட்டி. ஸரஸ்வதி தேவி இவனுடைய திருமஞ்சனத்திற்கு வேண்டியவற்றை கொண்டு வந்து தந்தாள்; குளித்த பின் நெற்றியிலிடுவதற்குச் சிந்துரமும் கண்ணுக்கு அஞ்சனமும் அவளே உதவுகிறாள்." என்று பெருமையடித்துக் கொண்டாள் கண்ணனை வளர்க்கும் செவிலித்தாய். "இந்தக் குழந்தையைக் கண்டதும் எனக்குப் பால் சுரக்கிறது." என்று தொட்டிலில் இருந்த கண்ணனை வாரியெடுத்து முத்தமிட்டாள் ஒரு இடைச்சி. "எனக்கும் அப்படித்தான்" என்று அவளருகிலே இருந்த கட்டழகி ஒருத்தி கண்ணனைத் தன் மடிமேல் கிடத்திக்கொண்டு பாலூட்டலானாள். ஆனால் அவள் திடீரென்று அலறி விழுந்தாள். அவளுடைய பெண் உருவம் பேயுருவமாக மாறி விட்டது. "பேயல்லவா பெண்ணுருவாகி வந்தாள்" என்று அதிசயித்தார்கள் அவளைக் கண்டவர்கள். "தாய் முலைப்பாலில் அமுதிருக்க, இந்தப் பேய் முலையில் வாய் வைத்ததே இக் குழந்தை!" என்று அதன் அறியாமைக் கண்டு இரங்கினார்கள். பின்பு, "இவள் ஒரு அரக்கியே ஆகவேண்டும். கஞ்சனுடைய ஏவுதலால் இந்தக் குழந்தையை நஞ்சூட்டிக் கொல்வதற்காக, இடைச்சி வடிவு கொண்டு வந்திருக்கிறாள்" என்றாள் ஒருத்தி. "பிள்ளையின் அறிவைப் பார்த்தாயா? இவளுடைய முலையிலே விஷம் இருப்பதை உணர்ந்து முலையைச் சுவைப்பதுபோல உயிரையே வாங்கி விட்டானே!" என்று வியந்தாள் மற்றொருத்தி.

இந்தச் செய்தியை அசோதைப் பிராட்டி அறிந்ததும் அவள் ஓடோடியும் வந்து குழந்தையை வாரியெடுத்து மார்போடு அணைத்துக்கொண்டாள்; குழந்தையை உற்று நோக்கினாள். "வஞ்ச மகள் துஞ்ச அவள் கொங்கையில் வாய் வைத்த பிரானே! உன்னை அறிந்துகொண்டேன்; உனக்கு அம்மம்தர அஞ்சுகிறேன்" என்று, முலை யுண்ண விரும்பிய கண்ணனுக்கு முலை மறுத்தாள்; பிறகு. அவன் அழுவதைக் கண்டு மனமுருகி "பேய் முலையைச் சுவைத்த பித்தா! உனக்கு என் முலையமுதமும் வேண்டுமோ?" என்று கொஞ்சினாள். மற்ற இடைச்சியரும், "பேய்ச்சி முலையுண்ட பின்பு, இப்பிள்ளையைப்பற்றிப் பேசுவதற்கும் பயமாயிருக்கிறது" என்று கூறி, அசோதையிடம் விடை பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் வீடுகளுக்குச் சென்றார்கள்.

சீவக சிந்தாமணி

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஐயனே! சொல்லுகிறேன் கேள்! ஆண் பன்றியையும் முள்ளம் பன்றியையும் கொன்று அதைச் சமைப்போம். அவ்விதம் சமைத்த கொழுப்பில் தேனை ஊற்றித் தின்போம். பின்பு நெல்லால் ஆக்கின தொண்டிக் கள்ளைக்குடிப்போம்; தெரியுமா?" என்றான்.

"ஐயா! நீங்கள், முற்பிறப்பில் மாமிசம் முதலியவற்றைத் தின்றமையால் இப்பிறப்பில் வேடரானீர்கள். ஆதலால் அவற்றை விட்டு விடுங்கள்." என்று சீவகன் சொன்னான்.

"ஐயோ! அவற்றை விட்டு விட்டால் எவ்வாறு நாங்கள் உயிருடனிருப்போம்! எம் உடம்பை வாட்டாதீர்; வேறு யாருக்காவது இதைச் சொல்லுங்கள்" என்றான் வேட்டுவன்.

"ஐயா! மாமிசத்தைத் தின்று நரகத்தில் வாழ்தல் நன்றோ? மாமிசம் தின்னாமல் உடலை வாட்டித் தேவராய் வாழ்தல் நன்றோ?" என்றான்,

"மாமிசத்தை நீக்கித் தேவராய் வாழ்தலே நல்லது" என்று வேட்டுவன் சொன்னான்.

"நீர் உண்மையைச் சொன்னீர். அவ்விதமே செய்ய வேண்டும்" என்றான் சீவகன். உடனே வேட்டுவன், மாமிச முதலியவற்றை எறிந்து விட்டுச் சீவகனை வணங்கித் தன்னிருப்பிடம் சென்றான்.

சீவகன், வேறு வழியே சென்றான். அங்கு அரக்கு மாளிகையில் நெருப்பால் சூழப்பட்ட பாண்டவரைப் போலக் காட்டுத் தீயால் வளைக்கப்பட்ட யானைக் கூட்டத்தைக் கண்டு மனமிரங்கினான். உடனே சுதஞ்சணன் தனக்குக் கூறிய மந்திரத்தால் மழையை உண்டாக்கித் தீயை அவித்து யானைகளின் துன்பத்தை நீக்கினான். பின்னர் அவ்விடம் நீங்கி அரணபாதம் என்னும் மலையை அடைந்தான். அங்குள்ள முனிவர்களை வணங்கிச் சினாலயத்தை அடைந்தான், சினாலயத்தில் உள்ள அருகனை வலம் வந்து மலர்களால் அருச்சித்துத்துதி செய்தான். அங்குள்ள இயக்கி ஒருத்தி, சீவகனிடத்து அன்பு கொண்டு பழ முதலியவற்றால் சீவகனுக்கு விருந்து செய்து உபசரித்தாள். விருந்துண்டபின், அவ்விடம் விட்டுப் பல சோலைகளைக் கடந்து பல்லவ தேசத்தின் எல்லையை அடைந்தான். அங்கே வயல்களில் களை பறித்துக்கொண்டிருந்த உழத்தியரிடம் நகரத்திற்குள் செல்லும் வழியைக் கேட்டுச் சந்திராபமென்னும் அந்நகரத்திற்குள் புகுந்தான்.

பல்லவ தேசத்தின் தலை நகரமான சந்திராபநகரின் ஓர் புறத்தே உள்ள சண்பக மரச் சோலைக்குள் சீவகன் சென்றான். சோலை பல வகையிலும் அழகுடன் விளங்கியது. அங்கு மங்கையர் பலர் ஆடவருடன் கூடியிருந்தனர். அவர்களுக்கு நடுவே அந் நாட்டின் இளவரசனான உலோகபாலன் என்பவன் வீற்றிருந்தான். அவனுக்கு எதிரில் உள்ள மேடையில் தேசிகப் பாவை என்ற நாட்டியப்பெண் நடனம் ஆடிக் கொண்டிருந்தாள். அவளுடைய சிறந்த நாட்டியத்தைக் கண்டு உலோகபாலன் முதலியவர் பரவசமுடன் அமர்ந்திருந்தனர். இந்தக் காட்சியை அவ்வழியே வந்துகொண்டிருந்த சீவகன் கண்டான். தேசிகப் பாவையின் நாட்டியத் திறமையைக் காண்பதற்கு அங்குள்ள ஆடவரோடு தானும் ஒருவனாக அமர்ந்தான். நாட்டியமாடிக்கொண்டிருந்த தேசிகப் பாவை அங்கு வந்து அமர்ந்த சீவகனைப் பார்த்தாள். கவிகளும் புகழ்தற்கரிய வடிவம் கொண்ட சீவகனுடைய அழகைத் தன் கண்களாகிய கைகளால் முகந்து பருகினாள். அவளுடைய பார்வையும் உள்ளமும் சீவகனிடம் பதிந்து விட்டன. சீவகன் மீது காதல் கொண்டு நாட்டிய மாடுதலையும் மறந்து அவனைப் பார்த்தபடியே நின்றாள்— 'கன்னித் தன்மையோடு முற்றிக் கனிந்து மணம் வீசும் காமமாகிய பழத்தை இவ்வீரனுக்கு உண்ணக் கொடுப்பேன்' என்று விரதம் பூண்டு மயங்கி நின்றாள். தேசிகப் பாவை, நாட்டியமாடாமல் யாரோ ஒருவன் மீது காதல் கொண்டு நோக்கி நிற்பதை உலோகபாலன் அறிந்து அதிசயமுற்றான். அவள் நோக்கும் திசையைத் தானும் பார்த்தான். 'மன்மதனுடைய வடிவம் இதுதானா!' என்று சீவகனைக் கண்டு மயங்கினான். உடனே சீவகனைத் தன்னிடம் அழைத்து உபசரித்தான். சிறிது நேரம் இருவரும் அளவளாவினர். "நீ என் விளையாட்டுத் தோழன்" என்று கூறிச் சீவகனை அருகில் இருத்திக் கொண்டான் உலோகபாலன், இருவரும் அன்பால் ஒருவராயினர். 'இனி நான் இவனைப் பெற்றேன்' என்று தனக்குள் கூறிக் கொண்டாள் தேசிகப் பாவை. முன்பு போல் மீண்டும் அவள் நாட்டியம் ஆடி எல்லோரையும் மகிழ்வித்தாள். சீவகனும் தேசிகப் பாவையின் நாட்டியத் திறமையைக் கண்டு அதிசயம் அடைந்தான்.

அடுத்த வாரம்:-

பதுமையைப் பாம்பு கடித்தது

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

நௌகா சரித்திரம்

கீர்த்தனம் 12

I

பல்லவி

உன்ன தாவுனனுண்ட நிய்யது வான
யுருமுலயிதே வெனக திய்யது

சரணம்

1. ஸூடிகாலி யோட ஜூட்டி வடி
வடிகா வானலேதே கொட்டி

2. ஓடலோ ரந்த்ரமு கலிகெ யீ
வனிதல கெவ்வரு ஸலிகெ

3. கனுலகெந்து கானராது
கதி காளிந்தி மனகிக மீது

4. மதி போவுதாரி ஜனி ரம்மா அபுடெ
மதமிம்ப வலதண்டினம்மா

5. மனமொக்கசோ கூடராது ப்ரளய
மன நிதிகாளிவேறு லேது

6. ராஜ வதனுலு ராரம்மா த்யாக
ராஜ ஸகுனி ஜூடரம்மா.

II

வான—மழை
உன்னதாவுனி—இருக்குமிடத்தில்
உண்டநிய்யது—நம்மை இருக்கவொட்டாது
யுருமுலயிதே—மேககர்ஜனையோ வென்றால்
வெனகதியது—பின்னுக்கு வாங்காது போலிருக்கின்றது
ஸூடிகாலி—சுழல்காற்று
ஓடஜூட்டிவடிவடிகா—ஓடத்தைச்சுற்றி அடிக்கடி வீசவும்.
வானலு ஜதே கொட்டி—மழையினால் ஓடம் தண்ணீரில் கவிழும்படியாக வுள்ள இத்தருணத்தில் (உன்னதாவுனி)
ஓடலோ—ஓடத்தில்
ரந்த்ரமுகலிகெ—ஓர்பெரியத்வாரம் உண்டாய்விட்டதே
யீவனிதலகு எவ்வருஸலிகெ—இந்தப்பெண்மணிகளுக்கு யார் ஆதரவு
கனுலகெந்து கானராது—இருளினால் கண்களுக்கு ஒன்றும் [புலப்படவில்லையே
இக மீது மனகு காளிந்தி கதி—இனி நமக்கு (காளிந்தி) [யமுனாதேவிதான் கதி.
மதி போவுதாரின் ஜனிரம்மா—மனம் போனபடி காரியங்களை
அபுடெ—அப்பொழுதே [செய்தீர்கள் அம்மா.
மத மிம்பவலதண்டினம்மா—கர்வம் கொள்ளாதீர்கள் என்று [நான் உங்களுக்கு முன்னமேயே சொன்னேனம்மா.
மனமொக்கசோ கூடராது—பெண்களாகிய நாம் ஒரே இடத்
ப்ரளயமனன்—ப்ரளயமென்றால் [தில் சேரக்கூடாது.
இதி கானி வேறு லேது—இது தவிர வேறு இல்லை.
ராஜ வதனுலு—அழகுள்ள முகத்தையுடையவர்களான [பெண்மணிகளே
ராரம்மா—வாருங்களம்மா.
த்யாகராஜ ஸகுனி—தியாகராஜனின் நண்பனான கண்ணனை.
ஜூடரம்மா—தரிசனம் செய்யுங்களம்மா.

III

முன் கதை சுருக்கம்;—ஒரு சமயம் பக்தைகளாகிய கோபியர்கள் கண்ணனுடன் யமுனைக் கரையை யடைந்து, அங்குக் காணப்பட்ட ஓர் ஓடத்தில் ஏறி ஓடத்தைத் துடுப்பின் உதவியால் யமுனைப் பிரவாஹத்தில் மிதக்க விட்டு இல்லாஸமாகப் பொழுது போக்கினர். இந்திராதி தேவர்களும் கோபிகைகளின் பாக்கியத்தை வியந்து பேசினர். கண்ணன் தங்கள் வசப்பட்டதாக கோபிகைகள் தங்களுக்கு சமானமெவருமில்லையென மிகுந்த கர்வமடைந்தனர்.

கோபியர்களின் கர்வத்தை அடக்க எண்ணங் கொண்ட கண்ணனின் அபிப்பிராயம் அறிந்து இந்திராதி தேவர்கள் ஸ்ரீ கிருஷ்ணனின் எண்ணத்தைப் பூர்த்தி செய்விக்க வேண்டி மழையைப் பொழிப்பித்தனர். அச்சமயம் ஓடத்தில் த்வாரம் உண்டாக அதன் வழியாய் ஓடத்தில் ஜலம் புக, கோபியர்கள் மனச் சஞ்சலமடைந்தவர்களாய் ஸ்ரீ கிருஷ்ணனை பலவாறாக மனத்தில் தியானம் செய்யத் தொடங்கினர் என்று

பாகாரி ப்ரமுகுல் வினோத முலு ஸல்பனுக்
ஞகா விம் பகா
ஞகாசம் புனனுண்டி வானவடகன்—
டலாவேள வ்ராலென் மறின்
நௌகா ரந்த் ராமுலோ ஜலம்பு சௌரகா—
னத் யூந்த வ்யாசங் கலெ
ஸ்ரீ காருண்ய நீதே ஹரே யனி செலுல்—
சிந்திஞ்சி ரய்யேடலோன்.

ஸ்வாமிகளால் எழுதிய மேலே காட்டிய பாடலில் கூறப்பட்டுள்ளது.

உன்னதாவுன:—இது நௌகா சரித்திரத்தின் 12-வது கீர்த்தனம். இடி மழையில் அகப்பட்டுக் கொண்ட தோடல்லாமல் ஓடத்திலும் த்வாரமுண்டாகி அதன் வழியாய் ஜலம் உள்ளே பிரவேசிக்கத் தொடங்கினதால் பயங்கொண்ட கோபிகைகள் வருத்தங் கொண்டு புலம்புவதை இக்கீர்த்தனத்தால் ஸ்வாமிகள் தெரிவித்துள்ளார்.

IV

ராகம் முகாரி — சாபு தாளம்

22—வது மேள ஜன்யம்—ஆ. ஸரிமபநிதஸ. (ஸரிமபதஸ்) அவ ஸம்பூர்ணம்.

பல்லவி

;	ஸ்ா ;	ஸ்ா ;	ஸ்ா ;	ஸ்ா	ஸ்ா ;	ஸ்ா நீ	தா ;
	உன்	ன	தா	வு	ன	ணு ண	ட
தா	ஸ்ா ;	ரீ க்ா	ரீ ;	ஸா ;	நீ	தா ;	பா ;
னிய்	.	ய .	.	து	.	வா	ன
;	பா மா.	பா நீ	தா பா	பா மா	கா	கா ரீ	ரீ ஸா
	யு ரு	மு .	ல	யி .	.	தே .	வெ .
ரீ	ரீ ;	பா மா	கா ரீ	ரீ கா	ஸா	ஸா ;	; ;
ன	க	திய் .	ய .	து .	.	.	

(சரணங்களை பல்லவி போன்றே பாடவும்.)

'கண்டா' ராகம் 'சாபு தாளம்' என்று புஸ்தகங்களில் இக்கீர்த்தனத்திற்கு குறிப்பிடப்பட்டுள்ளது. முகாரி ராகத்தில் பாடப்பட்டுவந்த வர்ணமெட்டை இங்கு வெளியிட்டுள்ளேன்.

ஸர் கே. வி. ரெட்டி

'கே. எஸ். ஆர்.' எழுதியது

பராதீனப்பட்ட நாட்டில் பெருமையுற இரண்டுவழிகள் தான் உண்டு. ஒன்று அதிகாரிகளைத் திருப்தி பண்ணி அவர்களிடமிருந்து பட்டம் பதவிகளைப் பெறுவது: மற்றொன்று உரிமையைப் பாதுகாக்க பயமின்றி நடப்பது. இருவிதத்திலும் இறுதியில் பெருமையேதான் எனினும், இரண்டிற்கும் வித்தியாசமுண்டு என்பர் விஷயமறிந்தோர். முந்தியவர் தாஸவர்க்கத்தைச் சேர்ந்தவர்: பிந்தியவர் தேசபக்தர் கோஷ்டியைச் சார்ந்தவர் என்பர் அவர்கள். நம் நாட்டு நிலைமை இப்படியிருக்க, உண்மையான ஜனநாயகம் வேரூன்றியுள்ள தேசங்களில் உள்ள ஸ்திதி வேறு. இதற்குக் காரணம் என்ன? அங்கு மக்களின் பிரதிநிதி பலமே நிர்வாகத்தை நடத்துகிறது: பொதுஜன க்ஷேமத்தைப் பிரதீக்ஷித்தே கக்ஷிகள் போட்டியிடுகின்றன: ஒரு ஸர்க்கார் இருப்பதும் போவதும் மக்களின் மனத்தையே பொறுத்திருக்கிறது. நம் நாட்டில் இதற்கு வழியுண்டா? இதற்கு வழி தேடவே காங்கிரஸ் சேவை செய்தது. காங்கிரஸ லக்ஷியம் விரைவில் நிறைவேற நாட்டு ஜனங்களின ஒருமித்த பலமல்லவா உதவும்! சதா பல கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டே போவதா? அல்லது கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு சுகவாழ்வை நாடுவதா?— இந்தப் பிரச்னையே பலரைச் சிந்தனையில் ஆழ்த்தியது. அதிகாரிகளின் மோகவலையில் சிக்கினர் பலர்: காங்கிரஸ் முயற்சியினால் கிடைத்த லாபத்தை தாங்களே பகிர்ந்து கொள்ள முற்பட்டனர் அவர்கள். இவர்களுள் ஸர் கே. வி. ரெட்டியும் ஒருவர்: யோகபாவம் மிகுந்தவர்.

* * * * *

ராய் பஹதூர் டாக்டர் ஸர் கூர்மா வெங்கடரெட்டி நாயுடுகாரு 1875-ம் வருஷத்தில் ராஜமஹேந்திரபுரத்தில் பிறந்தார்: பிதாவான பாபய்யா நாயுடு போலீஸ் இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்தவர். ரெட்டி குடும்பம் பல தலைமுறைகளாகவே ராணுவ சேவையில் பிரசித்தி பெற்றவர்களைக் கொண்டது. பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் டச்சுக்காரர்களுக்கு எதிராக ஆங்கிலேயருக்கு உதவிய சாம்பண்ணாவுக்கு "குமாண்டன்" என்ற பெயர் வாய்த்தது: இவர் ஸர் ரெட்டியின் முன்னோருள் ஒருவர். இதற்கப்புறம் அநேக வருஷ காலம் இந்த குடும்பத்தார் "குமாண்டன்" அல்லது "கமாண்டெண்ட" என்றே அழைக்கப்பட்டு வந்தனர். இவர்களுக்கு கங்காவரம், கூர்மாபுரம் என்ற இரு கிராமங்கள் மானியமாகவும் இருந்தன.

* * * * *

வெங்கடரெட்டி ராஜமஹேந்திரபுரம் யுனைடட் ஹைஸ்கூலில் படித்து மெட்ரிகுலேஷன் பரிக்ஷையில் தேறினர்: பிறகு அங்குள்ள கவர்ன்மெண்ட் காலேஜிலும் சென்னை கிறிஸ்தவர் கலாசாலையிலும் படித்து, பி. ஏ. பரிக்ஷையில் 1894-ல் தேறினர். பரிக்ஷையில் தேறிய பின்பு சொற்ப காலம் இவர் ராஜமஹேந்திரபுரம் கவர்ன்மெண்ட் காலேஜில் ரஸாயன சாஸ்திர போதகாசிரியராக பதவி வகித்தார்: அமலாபுரம் போர்ட் ஹைஸ்கூல் சாஸ்திரப் பகுதி ஆசிரியராகவும் சிலகாலம் இருந்தார். இவர் 1900-ம் வருஷம் "பி எல்" பரிக்ஷையில் தேறினர். உடனே ராஜமஹேந்திரபுரத்தில் தொழில் நடத்த ஆரம்பித்துவிட்டார்: காலக்கிரமத்தில் நல்ல வருமானம் கிடைப்பதுடன் செல்வாக்கும் விருத்தியடைந்தது: இதே காலத்தில் பொதுஜன சேவையிலும் அபிலாஷை அதிகரித்தது இவருக்கு. இவர் ராஜமஹேந்திரபுரம் நகர சபை மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்டு நான்கு வருஷகாலம் ஊழியம் புரிந்தார். லார்ட் ஆம்ப்தில் இங்கு 1903-ல் விஜயம் செய்த போது இவரே இதன் தலைவராக இருந்து அவருக்கு உபசாரப் பத்திரத்தைப் படித்துக்கொடுத்தார். இதனால் பெரிய அதிகாரிகள் இவரைப்பற்றி அறிய முடிந்தது: வாழ்க்கையின் ஆரம்பத்திலேயே அதிகாரிகளின் தொடர்பு ஏற்படும் வழியை இவர் கண்டுகொண்டார். 1907-ம் வருஷம் முதற்கொண்டு 1919 வரை இவர் எல்லூர் நகரசபைக்குப் மெம்பராக தேர்ந்தெடுக்கப்பட்டார். இவருக்கு போட்டியே கிடையாது. இதிலிருந்து பொதுஜன ஆதரவு இவருக்கு எவ்வளவு தூரம் இருந்தது என்பது புலனாகும்.

* * * * *

ஸ்தல ஸ்தாபனங்களில் இவர் செய்த சேவை குறிப்புக்குரியதேயாகும்: அதை அதிசாமான்யமாக கருதக் கூடாது. போலாவரம் தாலூகா போர்ட் மெம்பராகவும் உபதலைவராகவும் இருந்த நாளில் இவர் கிராமவாசிகள் விஷயத்தில் அதிக சிரத்தை காட்டினர். கிராமப்புற நிலை அபிவிருத்தியடைய வேண்டுமென்று முழு மனதுடன் முயற்சித்து வந்தார். இதே மாதிரி கோதாவரி ஜில்லா போர்டில் மூன்று வருஷ காலம் ஸ்தானம் வகித்தபோதும், விவசாயிகள் படும் கஷ்டங்களை எடுத்துக் காட்டி அவற்றைப் பரிகரிக்கும் விதத்தை நாடும்படி வற்புறுத்தி வந்தார். 1917-ஆம் வருஷத்தில் சென்னை ஸர்க்கார் பிறப்பித்த உத்திரவு காரணமாக ஸ்தலஸ்தாபனங்களுக்கு உத்தியோகப்பற்றில்லாத தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட்டது. அப்போது எல்லூர் தாலூகா போர்டு தலைவராக இவரே பொறுக்கியெடுக்கப்பட்டார். சென்னை ஸர்க்காரும் பிரதி வருஷமும் தங்களது யாதாஸ்தில் இவரது நிர்வாகத்தைப் பாராட்டி வந்தனர். இந்தப் பிரதேசத்தில் ஆரம்பக் கல்வித் திட்ட விஸ்தரிப்புக்கும், ஜல சப்ளை ஏற்பாட்டிற்கும் இவர்தான் காரணபூதராயிருந்தார். இவர் ஆரம்ப காலத்தில் பல காங்கிரஸ் மஹா சபைகளில் கலந்து கொண்டார்: சில முக்கிய தீர்மானங்களைக் குறித்தும் பேசியிருக்கிறார். உதாரணமாக 1911-ல் நடந்த கல்கத்தா காங்கிரஸில் மிண்டோ - மார்லி சீர்திருத்தத்தைப்பற்றி இவர் பேசியது இவரது பரந்த ஞானத்தையே புலப்படுத்துகிறது. 1914-ம் வருஷம் சென்னையில் நடந்த காங்கிரஸில் இந்தியர்களை மிகத் தாராளமாக ராணுவத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், இதற்காக ராணுவப் பள்ளிக்கூடங்கள் ஆரம்பமாக வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் பிரேரிக்கப்பட்டது; இதை ஆதரித்து இவர் திறமையுடன் பேசினர்: இதற்கப்புறம் இவருக்கும் காங்கிரஸுக்கும் சம்பந்தம் மறைந்து விட்டது. கோதாவரி ஜில்லா இரண்டாக்கப்பட்ட பின், எல்லூரில் ஒரு சப் கோர்ட் ஸ்தாபிக்கப்பட்டது. இவரும் இன்னும் சிலரும் தொழில் புரிய எல்லூருக்கே வந்து சேர்ந்தனர் வெகு விரைவில் தொழிலில் இவர் முதன்மை ஸ்தானத்தை எட்டினர். சேவையை மதித்து "ராய் பஹதூர்" பட்டம் கிடைத்தது.

* * * * *

பிரித்தாளும் தந்திரம் பிரிட்டிஷாருக்கே ஏக போகம். சென்னையில் ஜஸ்டிஸ் கட்சி ஆரம்பிக்கப்பட்டதற்கு சென்னை கவர்ன்மெண்டே காரணம் என்பது பின் பொரு சமயம் வெளிப்பட்டது. 1919-ம் வருஷத்திய இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தைப் பிறப்பிக்கு முன், விசாரணை நடத்திய கூட்டுப் பார்லிமெண்டரி கமிட்டி முன் சாக்ஷியம் கூற, இந் நாட்டிலிருந்து அநேகம் தூதுக் கோஷ்டிகள் சென்றன: பெரிய ஆங்கில ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தர்களும் கமிட்டி முன் ஆஜரானர்கள், இவர்களுள் ஒருவர் ஸர் அலக்ஸாண்டர் கார்ட்யூ. ஸர் கார்ட்யூவை, கூட்டுக் கமிட்டி மெம்பரான லார்ட் ஸின்ஹா பலமாகக் குறுக்கு விசாரணை பண்ணினர்: பிராம்மணரல்லாதார் இயக்கம் ஆரம்பித்ததற்கு சென்னை சர்க்கார் காரணமா இல்லையா என்று லார்ட் ஸின்ஹா அவரைக் கேட்டார். அப்போது ஸர் கார்ட்யூ எல்லாவற்றையும் மறுத்தார்: ஸர்க்காருக்கும் அந்தக் கட்சிக்கும் ஒருவித உறவும் இல்லை என்றும் சாதித்தார். லார்ட் ஸின்ஹா இத்துடன் நிற்கவில்லை: ஸர் கார்ட்யூ கையொப்பத்தின் கீழ் வெளியிடப்பட்ட ஸர்க்கார் உத்திரவின் பிரதி யொன்றைத் தருவித்தார்: அதில் ஜஸ்டிஸ் கட்சியை ஆதரிக்க வேண்டியதன் அவசியம் வற்புறுத்தப்பட்டிருந்தது: அந்த தஸ்தாவேஜியை ஸர் கார்ட்யூவிடம் நீட்டினர். உடனே ஸர் கார்ட்யூவின் முகம் சுண்டி விட்டது. என்ன செய்வார் பாவம்! தமது பொய்யும் சூழ்ச்சியும் வெளியாகி விட்டதால் அவர் தலை நிமிர்ந்து நிற்க முடியவில்லை. இதே கூட்டுக் கமிட்டியில் பிராம்மணரல்லாதார் தூதுக் கோஷ்டியைச் சேர்ந்த ராய்பஹதூர் கே. வி. ரெட்டியும் சாக்ஷியம் கொடுத்தார். இந்தியா மந்திரி மிஸ்டர் மாண்டேகு அச்சமயம் லார்ட் ஸின்ஹா போலவே சில கேள்விகளைக் கேட்டு இவரைத் திடுக்கிட வைத்தார்.

* * * * *

ஜஸ்டிஸ் கக்ஷி ஆரம்பமானதும் அதில் சேர்ந்து கொண்டவர் ஸ்ரீ கே. வி. ரெட்டி. இந்தக் கக்ஷியில் ஒரே ஒரு குறை உண்டு: அது

நிவர்த்தியானால் தான் நேர்மையும் நியாயமும் நிலவும். ஒரு வகுப்பாரைப் பழிப்பதையே பிரதானமாகக் கொண்டால் எவ்வளவு நாள் தான் பழித்துப் பேசமுடியும்? தங்களது கக்ஷியாரின் முற்போக்கில் சிரத்தை காட்டினல் பலன் உண்டே தவிர, பிறரை நிந்திப்பதால் அனுகூலம் ஏற்பட்டு விடாது: அப்படிக் கிடைக்கும் அனுகூலமும் நிரந்தரமாக நிலை நிற்காது. பிறப்பும் பெருமையும் பூர்வ ஜன்மபயன்: இதை மறந்தனர் ஜஸ்டிஸ் கக்ஷி ஸ்தாபகர்கள், வசைமாரியில் ஈடுபட்டனரே தவிர, வாழ்க்கையின் உயர்வை மதிக்கவில்லை. ஆரம்ப காலத்தில் ஜஸ்டிஸ் கக்ஷிக்குக் கிடைத்த ஆதரவு மிகவும் அதிகம். ஸர்க்காரின் உதவியும் மறைமுகமாகக் கிடைத்து விட்டால், அதைவிட இன்னும் அதிகம் என்ன வேண்டும்? இந்தக் கக்ஷியில் இவர் சேர்ந்து கொண்டது இவருக்கு நன்மையையே பயந்தது. மாண்டேகு - சேம்ஸ்போர்ட் சீர் திருத்தங்களுக்கப்புறம் நாட்டில் பொதுத் தேர்தல் நடந்தது: சென்னை மாகாணத்தில் ஜஸ்டிஸ் கட்சிக்கு அநேக ஸ்தானங்கள் கிடைத்தன. காங்கிரஸ் விலகி நின்றதால் பலத்த போட்டியே இருக்கவில்லை: ஸ்ரீ கே. வி. ரெட்டியும் சென்னை சட்ட சபைக்கு 1920-ல் தேர்ந்தெடுக்கப்பட்டார்: அடுத்த தேர்தலிலும் வெற்றிகண்டார் இவர்.

* * * * *

இதே வருஷம் டிசம்பர் மாதம் சென்னையில் மந்திரி சபை அமைக்கப்பட்டது. பனகல் ராஜா பிரதம மந்திரியானர்: ஸ்ரீ கே. வி. ரெட்டியும் ஸ்ரீ பத்ரோவும் மற்ற மந்திரிகள். இவர்கள் மூன்று வருஷ காலம் பதவி வகித்தனர். பதவி வகித்த பின்பு தான் புதிய சீர்திருத்தத்தில் இருந்த பிரமை இவருக்கு மறைந்தது. இவர் கூறிய வாக்கியங்களே இதைப் புலப்படுத்தும், "நான் அபிவிருத்தி மந்திரி: ஆனல் வன இலாகா மந்திரியான என்னிடம் ஒப்புவிக்கப்படவில்லை. நான் விவசாய மந்திரி: ஆனல் நிர்ப்பாசன இலாகா என்னிடம் கொடுக்கப்படவில்லை. அது சட்ட மெம்பரிடமே இருந்தது: மற்றும் நிர்ப்பாசன இலாகா சம்பந்தப்பட்ட பொது மராமத்து இலாகா வேறு ஒரு மந்திரியின் ஆதீனத்தில் இருந்தது. விவசாய மந்திரியாயிருந்தும் சென்னை விவசாயிகள் கடன் சட்டம் அல்லது சென்னை நில அபிவிருத்திக் கடன் சட்டம், ஆகியவை பற்றி உத்திரவு பிறப்பிக்க எனக்கு அதிகாரம் கிடையாது. இவை சம்பந்தமாக ஒரு சமயம் நான் சில சிபார்சுகளைச் செய்தேன். அப்போது இது அதிகாரவரம்பை மீறுவதாகும் என்று கூக்குரல் கிளம்பியது. ஒதுக்கப்படாத இலாக்காக்கள் சம்பந்தப்பட்ட வரையில், நிர்வாக சபை மெம்பர்கள் அனுமதியின்றி, எந்த மந்திரியும் எந்த தஸ்தாவேஜையும் பார்க்கக்கூடாது என்று கூறிவிடப்பட்டது. பஞ்ச நிவாரண ஏற்பாடுகளைப் பற்றியும் விவசாய மந்திரிக்குப் பொறுப்பு இல்லை. இம்மாதிரி முக்கிய அதிகாரங்கள் இல்லாமல் விவசாய மந்திரி வேலை தமது அலுவலைக் கவனிக்க வேண்டியிருந்தது. இது தவிர நான் கைத்தொழில் மந்திரி: தொழிற்சாலைகள், மின்சாரம், ஜலசக்தி இவை என் கீழ் கொடுக்கப்படவில்லை." ஆனல் மந்திரியாக இருந்த காலத்தில் கைத் தொழில்களுக்கு ஸர்க்கார் உதவி அளிப்பது பற்றியசட்டத்தை இவர் நிறைவேற்றி வைத்தார். பனகல் ராஜா இரண்டாவது விசை மந்திரி சபை அமைத்தபோது ஸர் கே. வி. ரெட்டிக்கு அதில் ஸ்தானத்தைக் கொடுக்கவில்லை. ஸர் கே. வி. ரெட்டி தனித்து நின்றார். சட்டசபையில் அநேக சமயங்கள் நடு நிலைமை வகித்தார். 1924-ல் ஸர் அலக்ஸாண்டர் முட்டிமான் தலைமையில் சீர்திருத்த விசாரணைக் கமிட்டி நியமிக்கப்பட்டது. இதற்கு ஸர் கே. வி. ரெட்டியும் தமது அபிப்பிராயத்தை எழுதியனுப்பினர். இந்தக் குறிப்பில் இவர் தற்போதைய ஆட்சி முறையில் காணப்பட்ட குற்றங்குறைகளையும் விவரித்து விட்டு, அவற்றை மாற்றுவதற்கு மாகாண சுயவாட்சி மூதன் முதலாகக் கொடுக்கப்படவேண்டும் என வற்புறுத்தினர்.

* * * * *

இதற்கு மூன்று வருஷங்களுக்கப்புறம் இந்தியாவுக்கு ஸைமன் கமிஷன் அனுப்பப்பட்டது. மறுவருஷாரம்பத்தில் இந்தக் கமிஷன் சென்னைக்கு விஜயம் செய்தது. இந்தக்கமிஷனில் இந்தியர்களுக்கு இடம் கொடுக்கப்படவில்லை, இது காரணம் பற்றி இதைப் பஹிஷ்கரிப்பதென்று முடிவு செய்யப்பட்டது; கமிஷன் சென்ற விடமெல்லாம் கறுப்புக்கொடியையே தேசத்தொண்டர்கள் தாங்கிநின்றனர். எங்கும் வரவேற்பே கிடையாது. ஆனல் சென்னையில் ஸர். கே. வி. ரெட்டி, ஸர் ஜான் ஸைமனுக்கும் மற்ற மெம்பர்களுக்கும் ஒரு விருந்து நடத்தினர். மிகவும் துணிகரமான காரியம்தான்! மக்களின் உணர்ச்சியை இவர் மதிக்கவில்லை என்பதும் வாஸ்தவம்தான். ஜனங்களின் மதிப்பு மறைந்து விட்டபோதிலும், அதிகாரியின் அன்பு அதிகமாகியது. இத்தகையவரை ஆதரிக்க வேண்டும் என்று அவர்கள் முற்பட்டது சகஜமல்லவா!

* * * * *

இதேவருஷம் இவரை ஜினீவாவில் நடக்கும் சர்வதேசச் சங்கக் கூட்டத்தின பிரதிநிதியாக இந்தியா ஸர்க்கார் அனுப்பினர், இவர் லண்டனுக்கு சென்றார். அப்போது ஸர் ஜான் ஸைமன் இவருக்குப் பெரிய விருந்து நடத்தினர். விருந்தில் இவர் நண்பருக்குத் தமது சந்தோஷத்தைத் தெரிவிப்பதைப் பிரதானமாகக் கொள்ளாமல், பிரிட்டிஷ் ஸர்க்காரைச் சிலாகித்தே அதிகம் பேசினர். தாய்நாடு திரும்பியதுதான்தாமதம், இவருக்கு மற்றொரு பெரிய பதவி காத்திருந்தது; அம்ருதஸரஸ் காங்கிரஸில் ராஜப்பிரதிநிதியான லார்ட் செம்ஸ்போர்டை இந்தியாவை விட்டுத் திரும்பிவந்துவிடும்படி பிரிட்டிஷ் ஸர்க்கார் உத்திரவிடவேண்டும் என்ற தீர்மானம் விவாதத்திற்கு வந்தது. இதை ஆதரிக்காதவர்களே கிடையாது. ஆனல் ஒருவர் மட்டும் தீர்மானத்தை எதிர்த்தார். ஸர் பி. என். சர்மா இத்தகைய தீர்மானத்தை நிறைவேற்றுவது உசிதமல்ல என்று வாதாடினர். ராஜப்பிரதிநிதிக்கு உடனே ஸர் பி. என். சர்மாவிடம் ப்ரீதி உதயமாகி விட்டது: சொற்ப காலத்திற்குள்ளேயே ஸர் சர்மாவை அவர் தமது நிர்வாகசபை மெம்பராக நியமித்துக் கொண்டார் என்று பலர் சொல்வதுண்டு. இதே மாதிரி ஸர் ரெட்டிக்கும் அதிருஷ்டம் பிறந்தது.

* * * * *

தென்னாப்ரிகாவில் முதல் இந்திய ஏஜண்ட்-ஜனரலாக நியமிக்கப்பட்ட மஹாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் சுமார் ஒன்றரை வருஷ காலம் பதவி வகித்து, 1928-ம் வருஷ முடிவில் விலகிக்கொள்ள முடிவு செய்தார். ஆகவே அவருக்கு அடுத்தபடியாக ஸர் கே. வி. ரெட்டியை இந்திய ஸர்க்கார் நியமித்தனர். மஹாகனம் சாஸ்திரியார் ஆரம்பித்த காரியங்களை முடித்து வைக்கப் பிரயாசைப்பட்டார். மறு வருஷம் பார்லிமெண்டரி கூட்டுக் கமிட்டி முன்பு ஓரிஸா மாகாண எல்லை நிர்ணயம் சம்பந்தமாயும் இவர் சாக்ஷியம் தந்தார். இதே வருஷம் இந்திய ராஜாங்கசபை மெம்பராகவும் இவர் இந்திய ஸர்க்காரால் நியமிக்கப்பட்டார். ஸர் கே. வி. ரெட்டி ஆந்திர மாகாணப் பிரிவினை விஷயத்தில் அதிக அக்கரை கொண்டிருந்தார்:

* * * * *

ஸர் கிருஷ்ணன் நாயர் 1934-ம் வருஷம் சென்னை ஸர்க்கார் சட்ட மெம்பர் பதவியிலிருந்து ஓய்வு எடுத்துக் கொண்டார். உடனே ஸர் ரெட்டி அந்த ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டார். மூன்று வருஷங்களுக்குக் குறைவாகவே இவர் பதவி வகித்தபோதிலும், பதவியை வெகு திறமையுடன் நிர்வகித்தார். 1936-ம் வருஷம் ஜுன் மாதம் கவர்னர் லார்ட் எர்ஸ்கின் நான்கு மாத ரஜாவில் இங்கிலாந்துக்குப் போனர். அப்போது ஸர் ரெட்டி ஆக்டிங் கவர்னராகவும் நியமிக்கப்பட்டார்.

* * * * *

புதிய இந்தியா சட்டம் 1937-ல் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது: ஏப்ரல் மாதம் மாகாண சுயவாட்சி முறை அனுஷ்டானத்திற்கு வந்தது, கவர்னர் நிர்வாக சபை மறைந்து, மந்திரி சபை நிறுவப்பட வேண்டியதாயிற்று. இடைக்கால மந்திரி சபையை அமைக்க நிர்ப்பந்தமேற்பட்டது. மாஜி சட்ட மெம்பரே முதன் மந்திரியானர். மூன்று மாதகாலம் கவர்னருக்கு உதவி புரிந்தார்.

* * * * *

இரண்டு வருஷங்களுக்கு முன்பு மஹாகனம் ஸ்ரீனிவாஸ சாஸ்திரியார் அண்ணாமலை சர்வகலாசாலை உபஅத்யக்ஷகர் பதவியைவிட்டுப் பிரிந்தார். இங்கும் மஹாகனம் சாஸ்திரியாருக்கு அடுத்தபடி இவரே நியமிக்கப் பட்டுத் தமது அந்திய காலம்வரை இந்தப் பதவியை வகித்தார். யுத்த முயற்சியிலும் ஸர் கே. வி. ரெட்டி ஸர்க்காருக்குப் பக்கபலமாக இருந்தார்.

* * * * *

ஸர் கே. வி. ரெட்டிக்கு ஸர்க்கார் "கே. ஸி. ஐ. இ" பட்டம் தந்தனர். 1935-ல் ஆந்திர சர்வகலாசாலை "டாக்டர்" பட்டத்தையும் அளித்துக் கௌரவித்தது. இதற்கு முந்திய வருஷம் தான் அந்த சர்வகலாசாலைப் பட்ட மளிப்பு விழாவில் இவர் ஆந்திர மாணவர்களுக்கு உபதேசம் பண்ணினர். இந்தியாவின் பொது வாழ்வில் ஸர் ரெட்டிக்கு முக்கிய ஸ்தானம் உண்டு. பிரபல புருஷர் என்பதை யாரும் மறுக்க முடியாது. நம் அரசியல் வாழ்வுக்கு இவர் பிரிவு நஷ்டத்தையே விளைவித்ததாகத்தான் நாம் கருத வேண்டும். சென்னை கவர்னர் தமது அனுதாபக் கடிதத்தில் குறிப்பிட்டப்படி, பல பெரும்பதவிகளை வகித்த இவர், ஸர்க்காருக்கும் மக்களுக்கும் அதிக ஒத்தாசை புரிந்தார். ஒருவருடைய வாழ்க்கையில் குண தோஷங்களைக் கற்பிப்பது, அவரவர் மனோபாவத்தையே தழுவியதாகும். "இவருடையது யோகஜாதகம், இதில் என்ன பிரமை?" என்று சுலபமாகக் கூறி விடுவர் சிலர். விவேகிகள் "தமது உள்ளத்தில் உதித்த கருத்துகளுக்கு விரோதமின்றி இவர் நடந்துகொண்டார். மனசாக்ஷியை பின்பற்றுவதே தர்மம்" என்பர். ஆகவே இவரது வாழ்க்கையை நாம் மதிப்பிடும்போது சேவைக்கு பல அம்சங்கள் உண்டென்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு; இவரும் தமக்கு யுக்தம எனத் தோன்றிய ஒரு அம்சத்தை அடிப்படையாகக்கொண்டு சேவை செய்தார் என்று போற்றுவதே கடமையாகும்.



BURN'S
STONE WARE PIPES

பர்ன்
பீங்கான் குழாய்கள்

பர்ன் கம்பெனியாரின் பீங்கான் குழாய்கள் ஸ்டாண்டர்ட் ஸ்பெஸிபிகேஷனுக்கு சரியாக பி. எஸ். எஸ்-க்கு தயாரிக்கப்படுகின்றது. இக் குழாய்கள் பூமியிலுள்ள திராவகம் கலந்த காற்றுக்களால் தாக்கப்படாதது அழிவற்றது

சென்ற 80 வருஷங்களுக்கு மேலாக, இந்தியா, பர்மாவிலுள்ள முனிஸிபல் கார்பொரேஷன்கள், சுகாதார இலாகாக்கள் மற்றுமுள்ள பொதுஸ்தாபனங்கள் பர்ன் பீங்கான் குழாய்களை உபயோகித்துத் திருப்தியடைந்துள்ளனர்.

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட், ஸ்தாபித்: 1781.
12, மிஷன்ரோ, கல்கத்தா. தொழிற்சாலை:- ராணிகஞ்சு & ஜபல்பூர்.
சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

BURN & CO., LTD.
ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE

வி.எச்.ஆர்
பெருங்காயம்

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோ அல்லது
சருமப்படுவனோ இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்

காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட். மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணா. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES

ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடெட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டி., மதராஸ்.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், திருநீர்மலை, குரோம்பேட்டை போஸ்டு, எஸ். ஐ. ஆர்.

ஜகஜ்ஜாலன்

ஓர் அரிய பெரிய நூதனமான துப்பறியும் நாவல். ஜகஜ்ஜாலன் என்னும் திருடனுடைய வீரதீர பராக்கிரமங்கள். படிக்கப் படிக்க ஆச்சர்யமாயிருக்கும். 518 - பக்கங்கள் கொண்ட சுத்தப்பதிப்பு. விலை ரூ. 1—12—0 தபாற்செலவு அணா 8.

மானேஜர், சுதேசமித்திரன் புத்தகசாலை, சென்னை.

சூதகம் நின்றிருந்தால்

3 நாட்டுகள் என்னும் மாத்திரைகளை 3 நாளைக்கு உபயோகித்தால் ஒழுங்கு பட்டுவிடும். ஒவ்வொருஆர்டருடன் உத்தரவாதம் அனுப்பப்படும். விலை ரூ.5/8. பத்து ஷிலிங்.
Dr. S. H. KHAN, (S. M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

கவலை வேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானால், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினால் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி
வைத்தியசாலை,
பழனி. S. I.

ஜெமினி
நந்தனார்

படத்திலுள்ள பாட்டுக்களில்
மிகவும் நன்றாயுள்ள மூன்று
பாட்டுக்களைத் தெரிவித்து
ரூ 10,000
லாபம் பெறுங்கள்

செப்டம்பர்
20உ
எல்லா முக்கிய
நகரங்களிலும்
வெளி வருகிறது

பூரா விவரங்களுக்கும்
ஜெமினி நந்தனார் பாட்டுப்-
புஸ்தகத்தைப் பாருங்கள்.
குறிப்பு: பாட்டுப்புஸ்தகம்
கூடிய சீக்கிரத்தில் எல்லா
ஊர்களிலும் கிடைக்கும்
நீங்கள்
கொடுப்பது
ஒன்றுமில்லை
ஆனால்
ஜெயிப்பது
ரூ 10,000

1942ன் உன்னத
சங்கீதப் படம்

Printed and Published by T. S Visvanatha Iyer, B.A at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C. R. Srinivasan, B. A